# ஆழ்வார்கள் கண்ட அல்லிக்கேணி



365
OFFICE OF THE REGISTRAR OF ...
FEB 1959
MADRAS
365
Q22:419f.21
N51
110933

# ஆழ்வார்கள் கண்ட அல்லிக்கேணி

(திருவல்லிக்கேணியைப்பற்றிய திவ்யப் பிரபந்தப் பாடல்களின் விரிவுரை)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 FEB 1959
MADRAS

ஆசிரியர்
திருமலை நல்லான்

இந்நூல்
சூளைப்பட்டாளம் கா. வ. ரங்கநாத முதலியாரவர்கள்
உதவியால் வெளியிடப்பெற்றது.

கிடைக்குமிடம்
34, பெத்து நாயக்கன் தெரு,
ஜி. டி. சென்னை 1.

பதிப்புரிமை] 1951 [விலை 12 அணா

ஸ்ரீ

# மதிப்புரை

திருவல்லிக்கேணி யென்பது ஸ்ரீகைரவிணி யென்பதன் மொழிபெயர்த்தலாகும்: ஆகவேஇந்தத்திருநாமம் இந்தத் திவ்ய க்ஷேத்ரத்திற்குத் தீர்த்தத்தால் வந்ததென்க: அங்ஙன் தீர்த்தத்தால் திவ்ய க்ஷேத்ரத்துக்குப் பெயர் அமையவேண்டுமாயின், அதற்குச் சிறப்புத் தன்மை தனியே யிருக்கவேண்டுமன்றோ! அங்ஙன் அமைந்தமை தலபுராணத்துத் தீர்த்த மகிமை சொல்லுமிடத்து ஓரிதிஹாஸ மூலமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும், புராணாந்தரத்தில் 'கங்கையில் அறுபதினாயிரம் யாண்டு மூழ்குவதாற் பெறலாகும்பயன் இந்தக் கைரவிணியில் ஒருதரம் மூழ்குவதனாற் பெறலாகும்' என்று பரமேசுவரன் பார்வதிக்கு அருளியதாக உள்ளது.

இத்தகைய தலத்திலுள்ள ஈடுபாட்டினால் நமது ஸ்ரீ. உ. வே. திருமலை நல்லான் சக்கரவர்த்தி ராமக்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமிகள் இந்த ஸ்தலமகிமையை யாவரும் எளிதாக உணரும்படி சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதியுள்ளார்: மற்றும், இந்தத்தலத்திலுள்ள பேரார்வத்தாலும், தாம் ஆழ்வார்கள் அருளிச்செயலில் ஈடுபட்டிருத்தலாலும் தம் அநுபவத்தைப் பிறரும் உணரும்படி இந்தத் தலவிஷயமான ஆழ்வார் பாசுரங்கட்கு முன்னோர் வியாக்கியையையொட்டிச் சிறப்புறப் பொருளையும் விரித்துரைத்துள்ளார்.

இந்த ஸ்வாமிகளின் ஈடுபாட்டுக்கும் உபய வேதாந்தங்களிலும் இருமொழியிலுமுள்ள புலமைக்கும் இந்தச் சிறுநூல் ஓருரைகல்லாகுமென்று அடியேன் சிற்றறிவுகொண்டு மதிக்கின்றேன்.

110933

இங்ஙனம்

தாஸன்

25-2-51 வை. மு. கோபாலக்ருஷ்ணன்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# முன்னுரை

சான்றோருடைத்தான தொண்டை நன்னாட்டிலே திருவல்லிக்கேணி தனிச்சிறப்புற்றது; பேயாழ்வாரைப் பெற்றெடுத்தது; "அன்று நான் பிறந்திலேன்" என்ற திருமழிசையாருக்கு அறிவுப்பிறப்பையளித்தது. வைணவம் வேரூன்றியது இவ்வூரிலே யெனின் மிகையாகாது. அன்றும் இன்றும் உண்மைக் கல்விக்கு உறைவிடமாயது இவ்வூரே பல்கலைக்கழகம் இவ்வூரிலேயே அமைந்திருக்கும் அழகு காண்க.

சிலகாலம் குடியிருந்த அடியேனை யாட்கொண்டது இவ்வழகிய திவ்ய தேசம். ஆதியை அமுதை அநுதினமும் சேவித்து அடியேன் அகங்கரைவதுண்டு. அப்பொழுது ஆழ்வார்கள் பாடல்களை அநுசந்திப்பேன். அறிவிலா அடியேனது நெஞ்சிலும் அமுதவூற்றெடுத்தது. காமருசீர்க் கலிகன்றியின் கனிந்த கவிதைகள் அடியேனது உள்ளம்புகுந்து தித்தித்தன. சுகமினிது வானுலகெய்திய இன்பத்தை அடியேன் கண்டேன்! பிறரும் காணவேண்டும் என்று கருதினேன். முன்னோர் உரையை முறைதப்பாமற் பின்பற்றி அடியேனது அநுபவத்தை எழுதி வைத்தேன். மூன்றாண்டுகட்கு முன் எழுதியது இன்று வெளிவருகிறது.

இவ்வூரைப்பற்றிய பேயார் திருமழிசைப் பெம்மான் அருட்கலியன் பாடல்கள் உரையுடன் எழுதப்பட்டுள்ளன. ஆழ்வார் மூவரும் இவ்வூரினை உளமகிழ வருணித்து ஈடுபடுவதுகண்டு அடியேன் இத்தொகுதிக்கு "ஆழ்வார்கள் கண்ட அல்லிக்கேணி" என்று பெயர் சூட்டியிருக்கிறேன். தமிழ்மக்கள் மிக்க மகிழ்வுடன் இதனை ஏற்பார்களாக.

நம் தமிழ் நாட்டின் சிறந்த உரையாசிரியராய் நற்பணிகள் புரிந்து, பார்த்தன் தேர்முன் நின்றுனின் பரமபக்தராய்த் திகழ்ந்துவரும் ஸ்ரீமான் உ. வே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர்ஸ்வாமிகள் இச்சிறு நூலைக் கடாக்ஷித்து மதிப்புரை ஈந்து சிறப்பித்துள்ளார் : அன்னார்க்கு அடியேன் தலையல்லால் கைம்மாறிலேன்.

இந்நூலில் கண்ணும் கருத்தும் பொருத்தி யருத்தியுடன் திருத்தும் பணியிலீடுபட்ட நண்பர் ஸ்ரீ. உ. வே. ஜெகந்நாதாசாரியர் M.A., L.T, விவேகாநந்தர் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் அவர்கள் செய்த உதவி என்றும் மறக்கற் பாற்றன்று. அன்னார் அருளும் பொருளும் பெற்று வாழுமாறு ஸ்ரீ பார்த்தசாரதிப்பெருமானை யடியேன் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்.

இந்நூலைக்கண்டு மனமுவந்து முன்வந்து வெளியிடப் பொருளுதவி புரிந்தவர் சூளைப்பட்டாளம், ஸ்ரீமான் கா. வ. ரங்கநாத முதலியாரவர்கள் 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற முதுமொழிக்கேற்ப அவராற்றிய இந்நற்பணியை இறைவனும் அடியார்களும் ஏற்று இன்புறுவார்களாக. கருவிலே திருவுடைய அவர் போற்று முறையில் ஆற்றும் இந்நற்பணி, அவர்தம் பக்திப் பெருக்கையும் வைணவப் பிரசாரத்திலுள்ள ஊக்கத்தையும் நன்கு வெளிப்படுத்துகிறதல்லவா ?

அடியேனது அநுபவத்தை இத்தமிழ் கூறு நல்லுலகமும் பெற்று இன்புறுவதாகுக.

ஏதுமறியாத என்னைக்கொண்டு இவ்வின்கவிதைகளின் அநுபவத்தை எழுதுவித்துத் தன் இணையடிக்கீழ் இட்டுக்கொண்ட எல்லாம்வல்ல இறைவனும் தேர்கடவிய பெருமானது இன்னருளை என்னென்பது !

இப்படிக்கு
தாஸன்
திருமலைநல்லான்

சென்னை
6-3-51

ஸ்ரீ:

# ஆழ்வார்கள் கண்ட அல்லிக்கேணி

## தலவரலாறு

திருவல்லிக்கேணி, பிருந்தாரண்யம் என்று புராணத்திலே வழங்கப்படுகிறது. கடற்கரையின்கண் உள்ள இத்தலத்தில் "கைரவிணீ" என்று பெயர்பெற்ற புஷ்கரிணிக் கரையில் இறைவன் ஐந்து வடிவங் கொண்டு எழுந்தருளியிருக்கிறன். கைரவிணியில் நீராடி இப்பஞ்சமூர்த்திகளை வழிபடுவார்க்கு இன்பந்தரு பெருவீடுவந்தெய்தும் என்று கூறப்படுகிறது.

## ஸ்ரீ மந்நாதர் வைபவம்

பிருகுமுதலிய ஸப்தரிஷிகள் மோக்ஷத்தைக் கருதிக் கடுந்தவம் செய்தனர் இத்தலத்திலே. ஒரு சமயம் சந்தனமரத்தடியிலே ஒரு பெண்மகவைக் கண்டெடுத்தார் பிருகுமுனிவர். "வேதவல்லி" என்று பெயரிட்டு அவ்வழகிய குழந்தையை அவர் அன்புடன் வளர்த்துவந்தார்.

திருமால், தன்னுடன் ஊடிய திருமகள் பிருகுமுனிவரிடம் திருமகளாராய் வளர்ந்து வருவதையறிந்து ஓர் அரசகுமாரனுக வந்து வேதவல்லியை மணந்துகொண்டனன். அவன் மணம் புணர்ந்த நன்னுள், மாசி மாதத்தில் சுக்லபக்ஷ த்வாதசியாகும். இந்நன்னுளில் இத்திருமண விழா இன்றும் இத்தலத்தில் நடைபெறுகிறது.

மணம் புரிந்த திருமால் பிருகுமுனிவர் வேண்டுகோளின்படி இத்தலத்திலே கோயில்கொண்டு எழுந்தருளி

யிருந்து வேதவல்லித்தாயாருடன் இன்றும் சேவை ஸாதித்து வருகிறான். 'மந்நாதன்' என்பது அவன்திரு நாமம். 'என் கணவன்' என்று பரிவொடு பெருமிதம் தோன்ற வேதவல்லி கூறியதால் இத்திருநாமம் வழங்கு கிறது.

மாகமாஸே மஹாதேஜா: த்வாதச்யாம் ஸஹரிஸ் ஸ்வயம் |
ப்ராதுராஸ ப்ருகோஸ்தஸ்ய ஹ்யாச்ரமே புண்யகர்மண: ||
யதோமந்நாத இத்யாஹ வேதவல்லீ சுசிஸ்மிதா |
ததோமந்நாத இத்யேவ விச்ருதோ புவநத்ரயே ||

(இ-ள்) மிக்க ஒளியை உடையவராகிய அந்த மஹாவிஷ்ணு, புண்யம்செய்த அந்தப் பிருகுமுனிவரது ஆசிரமத்தில் மாசிமாதத் துவாதசியில் தாமே தோற்றியருளினார். எக் காரணத்தினாலே வெளுத்த புன்னகையரும்பியவளாய் வேதவல்லி 'என்நாதன்' என்றுகூறினளோ, அக்காரணத் தினாலே 'மந்நாதன்' என்றே வழங்கப்பட்டு மூவுலகிலும் பிரஸித்தி பெற்றான்.

## ஸ்ரீ நரஸிம்ஹர் வைபவம்

அத்திரிமஹரிஷி மோக்ஷத்தை விரும்பி நெடுங்காலம் அல்லிக்கேணியில் தவஞ்செய்து வந்தார். ஜம்புவனத்தில் உள்ள முனிவருக்குப் பணிவிடைபுரிந்துவந்த விகட மஹ ரிஷி, பார்க்கவமுனிவரைக் காணவந்த மாரீசமுனிவர் வாயிலாக, பிருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் அத்திரிமுனிவ ருக்கு நாராயணன் பிரத்யக்ஷமாகப் போவதை வசிஷ்டர் கூறினரெனக் கேள்விப்பட்டு, பிருந்தாரண்யம் அடைந்து அத்திரி முனிவரோடு வசித்து வந்தார். வெகு காலங் கழித்து ஆகாயத்திலிருந்து ஒருவிமானம் வந்திறங்கியது.

ஐததர்ச விமாநஸ்ய மத்யே பாஸ்கர ரோசிஷ: |
ஆஸீநம் பரமம் தேவம் நரஸிம்ஹ ஸ்வரூபிணம் ||

(இ-ள்) சூரியன்போல் பிரகாசிக்கும் அந்த விமானத்தினுடைய மத்தியில் ஸ்ரீ நரஸிம்ஹப் பெருமான் வீற்றிருப்பதை அத்திரி முனிவர் ஸாக்ஷாத்கரித்தார்.

அவர் வணங்கி வாயார வாழ்த்தினர். 'தரியேனினி என்சன்மங்களையாய்' என வேண்டினர். ஸ்ரீநரஸிம்ஹப் பெருமானும் அவருக்கு அவ்வாறே அருள்செய்து, எல்லோருக்கும் அருள்சுரப்பானாய் அங்கேயே நித்யவாஸம் செய்தருளுகிறான்.

## ஸ்ரீராமபிரான் வைபவம்

திரேதாயுகத்தில் சசபதர் என்னும் முனிவர், பாண்டிய தேசத்தில் பாண்டரம் என்னும் மலையில் கடுந்தவம் புரிந்து வந்தார். அவர் தவம் இந்திரனால் ஏவப்பட்ட ஹேலை என்னும் அப்ஸரஸ் ஸ்திரீயினால் குலைந்தது. அவளது ஆடல்பாடல்கள் அவரை மயக்கிவிட்டன. அவ்விருவருக்கும் ஓர் ஆண்மகவு பிறந்தது. அதை மலைக் குகையில் விட்டு இருவரும் பிரிந்தனர். இறைவன் அருளால் சொட்டிய தேனைப்பருகிக் குழந்தை வளர்ந்து வந்தது. அங்குள்ள முனிவர்கள் அக்குழந்தையை எடுத்து 'மதுமான்' என்று பெயரிட்டுப் பல கலைகளையும் பயில்வித்தனர். மதுமான் பெரிய பக்திமான் ஆனான். அவன் ஒருநாள் கார்க்ய முனிவரைச் சந்தித்தான். ஸ்ரீராமபிரான் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளிய செய்தியை அகஸ்திய முனிவருக்கு அறிவிக்க வான்மீக முனிவரது ஆச்சிரமத்திலிருந்து போவதாகக் கார்க்யர் மதுமானுக்கு அறிவித்துச் சென்றார்; அதைக்கேட்டதும் மதுமானுக்கு இராமபிரானைத் தான் நேரில் சேவிக்கவில்லையே என்று வருத்தம் உண்டாயிற்று. இறைவன் கார்க்யர் வடிவத்துடன் அவன் கனவிலே தோன்றி, 'நீ பிருந்தாரண்ய க்ஷேத்திரத்தில் தவம்செய்தால் உனது

நினைவு நிறைவேறும்' எனக்கூறி மறைந்தான். அங்ஙனமே மதுமான் பிருந்தாரண்யத்தில் "காகுத்தா உன்னைக் காணுமா றருளாய்" என்று தவங்கிடந்தான்.

அவனது தவத்திற்கு உவந்து ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ந ஹநுமத் ஸமேதனாய் ஸ்ரீராமபிரான் ப்ரத்ய க்ஷமானான். மதுமான் விருப்பப்படி நெடுங்காலம் அவனால் ஆராதிக்கப்பட்டு, இன்றளவும் நாமும் கண்டு அநுபவிக்க லாம்படி அங்கேயே ஸ்ரீராமபிரான் எழுந்தருளியிருக் கிறான்.

> யாத்ருகாஸீத் புராராமஃ ராஜ்ஞோதசரதஸ்யஹி |
> ப்ராத்ருபிஸ் ஸஹிதஸ் தாத்ருக் ஸஸீதஃ ப்ரத்ய
> த்ருச்யத ||

(இ-ள்) முன்காலத்தில் தசரதருக்குப் புதல்வனாக இராம பிரான் எவ்விதம் இருந்தானோ, அவ்விதமே தோன்றி ஸஹோதரர்களோடும் ஸீதையோடும் காணப்பட்டான்.

## ஸ்ரீ பார்த்தஸாரதி வைபவம்

ஆத்ரேயமஹரிஷி தம்முடைய ஆசார்யரான வேத வியாஸபகவானிடம், இவ்வுலகில் தற்காலம் தவம் செய் வதற்குத் தக்க இடம் யாதென்று வினவினார். வியாஸ பகவான் 'பிருந்தாரண்ய க்ஷேத்ரமே தக்க இடம்: அங்கே ஸுமதி என்பவர் தவம் செய்துகொண்டிருக்கிறார்; நீரும் அவரோடு தவம் செய்திடுக' என்றுகூறி, வலத்திருக்கை யில் சங்கமும், இடத்திருக்கையில் தானமுத்திரையும் கொண்டதொரு திவ்யமங்கள விக்ரஹத்தை ஏறியருளப் பண்ணிப் பிரதிஷ்டை செய்து தாம் திருவாராதனம் செய்து, ஆத்ரேயர்கையில் கொடுத்து 'நீர் பிருந்தாரண் யத்தில் வைகாநஸவிதிப்படி இவ்வெம்பெருமானை

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள்

யாராதித்துத் தவம் செய்வீராக' என்று நியமித்தருளினர். அங்ஙனமே ஆத்ரேயர் ஸுமதியோடு ப்ருந்தாரண்யத்தில் ஆசார்யர் அநுக்ரஹித்த எம்பெருமானை நெடுங்காலம் ஆராதித்துப் பரமபதம் எய்தினர்.

இஃது இவ்வாறாக, ஸுமதி என்ற துண்டீர மண்டலத்தரசன் வேங்கடமலை சென்று அம்மலையில் படிந்த தொருகருமுகில் போன்ற திருவேங்கடமுடையானைப் பக்தியுடன் வணங்கிப் பாரதப் போரிலே பார்த்தற்குச் சாரதியாய் நின்ற கோலத்தைக் காட்டியருளவேண்டும் என்று வேண்டினன். திருவேங்கடமுடையானும் ப்ருந்தாரண்யத்திலே அங்ஙனம் ஸேவை ஸாதிப்பதாகக்கருணை கூர்ந்தான். ஸுமதி, மிக்க உவகை எய்தி, ப்ருந்தாரண்யத்தையடைந்து ஸ்ரீ பார்த்தஸாரதியை ஸ்ரீ ருக்மிணிப் பிராட்டி, பலராமன், அநிருத்தன், ப்ரத்யும்நன், ஸாத்யகி என்ற இவர்களோடு ஸேவித்து ஈறில் இன்பவெள்ளத்தில் மூழ்கினன். சைத்ரமஹோத்ஸவமும் அவனே செய்து வைத்தனன். அவன் கண்ட காட்சி இன்றும் நமக்குக் கிடைத்து வருகிறது.

ஸஇதாநீ மபிமுநே த்ருச்யதேதத்ரமாநவை: |
ருக்மிண்யாசாநிருத்தேந ப்ரத்யும்நேநச ஸேவித: ||
ஹலாயுதேந ஸஹித: ததாஸாத்யகிநா ஸஹ |
பார்த்தஸாரதி ரித்யேவ விச்ருதோஜகதீபதி: ||

(இ-ள்) இப்பொழுதும் ருக்மிணி, அநிருத்தன், ப்ரத்யும்நன் இவர்களாலே ஸேவிக்கப்பட்டும், பலராமன் ஸாத்யகி இவர்களோடு கூடியும் பார்த்தஸாரதி என்றே ப்ரஸித்தனாய் உலகின் தலைவனாகிய அந்த இறைவன் மானிடர்களால் ஸேவிக்கப்படுகிறான்.

## ஸ்ரீ வரதராஜர் வைபவம்

ஸப்தரோமா என்ற மஹரிஷி கருடாரூடரான வரதராஜப்பெருமாளை இந்தப் பிருந்தாரண்யத்திலே வைகாநஸ விதிப்படி ஆராதித்துவந்து, சிலகாலத்திற்குப்பின் மோக்ஷமடைந்தார். அந்த மஹரிஷி ஆராதித்துவந்த வரதராஜர் இன்றுவரையில் மக்களனைவரும் உய்யுமாறு சேவை ஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.

ஸோபிஸம்ப்ரதி ஸர்வேஷாம் ப்ராணிநாம் கோசரீபவந் |
வரதோநாம தேவேசஃத்ருச்யதேதத்ரவை ஹரிஃ ||

(இ-ள்) இப்பொழுதும் எல்லாப்பிராணிகளுக்கும் புலனாய் அந்தவரதன் என்னும் தேவப்பெருமாள் அவ்விடத்திலே காணப்படுகிறார்.

## தீர்த்த மஹிமை

பிருந்தாரண்யத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த முத்கல முனிவர், ஒரு நாள் திருவல்லிக்கேணி புஷ்கரிணியில் நீராடும்பொழுது ஓரழகியமீன் தன்பரிவாரங்களுடன் அவரது எதிரே வந்தது. முனிவர் அம்மீனை நோக்கி, "உன்னால் எனது தவத்திற்கு இடையூறு ஏற்படுமாதலால் பரிவாரங்களோடு நீ வேற்றிடம்சென்றுவிடு" என்று கூறினார். சாபத்திற்கு அஞ்சி அம்மீன் அவ்வாறே செய்தது. ஆகையால் அன்று முதல் இப்பொழுதும் அப்புஷ்கரிணியில் மீன்கள் காணப்படுவதில்லை. இந்திரதீர்த்தம், ஸோமதீர்த்தம், மீனதீர்த்தம், அக்னிதீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் என மேலும் ஐந்து தீர்த்தங்கள் இத்தலத்தில் உள்ளன.

தூர்வாஸமுனி ஹேமகூடமலையில் மத்தவாரணம் என்ற சிகரத்தில் 'அரஜஸ்' என்னுந்தீர்த்தத்தில் தவஞ்

செய்து கொண்டிருக்கும்பொழுது, வானவழியே சென்ற விச்வாவஸுவின் நிழல் அவர்மீது விழுந்ததால் சினந்து "சரீரமில்லாதவனைக் கடவை," எனச்சபித்தார். விச்வாவஸு திரு அல்லிக்கேணிக் கரையில் தவஞ்செய்து சாபம் நீங்கப் பெற்றான்.

ப்ருந்தாரண்ய நிவாஸாய பலராமாநுஜாயச |
ருக்மிணீ ப்ராணநாதாய பார்த்தஸூதாய மங்களம் ||

தலவரலாறு முற்றிற்று.

---

# பேயாழ்வார் அநுபவம்

## மூன்றாந்திருவந்தாதி 16-ஆவது பாசுரம்

**வந்து (உ)தைத்த வெண்திரைகள் செம்பவள வெண்முத்தம்
அந்திவிளக்கும் அணிவிளக் காம்—எந்தை
ஒருஅல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்வன்
திருவல்லிக் கேணியான் சென்று.**

ஒரு அல்லித்தாமரையாள் சென்று ஒன்றிய சீர்மார்வன் வெண்திரைகள் வந்து உதைத்த செம்பவளம் வெண்முத்தம் அந்திவிளக்கும் அணிவிளக்காம் திருவல்லிக்கேணியான் எந்தை என்று இயையும்.

ஒப்பற்ற அல்லித்தாமரையில் இருப்பவளாகிய லக்ஷ்மி (தானே) சென்று பொருந்திய அழகிய திருமார்பை உடையவனும், வெண்மை நிறமுள்ள அலைகள் வந்து தள்ளும் சிவந்த பவளங்களும் வெளுத்த முத்துக்களும் அந்தி வேளைக்கு விளக்கத்தைத்தரும் அழகிய விளக்குக்

களாகாநின்ற திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருப் பவனுமாகிய எம்பெருமான் எனக்கு ஸ்வாமி என்றவாறு.

இவ்வெண்பாவின் முன்னிரண்டடிகளில் திருவல்லிக் கேணிக் கடல்வளத்தையும், பின்னிரண்டடிகளில் அவ்வூர் இறைவனது எழிலுடைமையையும் பேசிப் பேயாழ்வார் ஈடுபடுகிறார்.

உதைத்தல்-தள்ளுதல். பவளமுத்தம்-உம்மைத் தொகை. விளக்கும்-பெயரெச்சம்; விளக்கும் விளக்கு என இயையும். அணிவிளக்கு-மங்கள தீபம். அணிவிளக்கு ஆம் (ஆகும்) திருவல்லிக்கேணி என்று கூட்டுக. அல்லி-தாமரைவகையில் ஒருபிரிவு.

'தாமரையாள் ஒன்றிய சீர்மார்வு' என்று தாமரையிலிருப்பவள் அதனைவிட்டு மார்பில் ஒன்றியதாகக் கூறவே, தாமரையினும் மார்புக்கு அழகு உடைமையும் மென்மையும் தோற்றுகின்றன. 'ஒன்றிய மார்வு' என்றதனால் தாமரையைப்போல இனி இவன் மார்பை விட்டு இலக்குமி பிரியமாட்டாள் என்று தெரிகிறது. "மாமலராள் செவ்விப்படிக்கோலம் கண்டகலாள்பல்நாள்" என்றார் பூதத்தாரும்.

இலக்குமி தானே வந்து மார்பில் ஒன்றுவதற்கு ஏதுவாவது, சீர் : சீர்-அழகு.

# திருமழிசையாழ்வார் அநுபவம்

## நான்முகன் திருவந்தாதி 35-ஆவது பாசுரம்

தாளால் உலகம் அளந்த அசைவேகொல்
வாளா கிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்கும்) மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐந்தலைவாய் நாகத் து) அணை.

நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணியான் ஐந்தலைவாய் நாகத்தணை வாளா கிடந்தருளும்: வாய் திறவான்: தாளால் உலகம் அளந்த அசைவே கொல்! என்று இயையும்.

நீண்ட கடல்வந்து அலைவீசுகிற பெரிய மயிலையையடுத்த பெரிய திருவல்லிக்கேணி எம்பெருமான் ஐந்து தலைகள் வாய்ந்த நாக (ஆதிசேஷ) ப்படுக்கையின்மீது வெறுமனே சயனித்தருளுகிறான்: வாயைத்திறக்கிறானில்லை. (இதற்குக் காரணம்) திருவடியால் உலகத்தை அளந்ததனாலுண்டாகிய வருத்தமோ! என்றவாறு.

தம் விடாய் தீரத் திருவல்லிக்கேணி யெம்பெருமானைத் தழுவிமுழுசிப்பரிமாறவேண்டும் என்று ஆவலோடு வந்தார் திருமழிசையாழ்வார். வரும்போது தமக்காக முன்னமேவந்து கிடக்கும் இறைவன், தம்மைக் கண்டதும் எழுந்து, 'வாரீர்' என வரவேற்பான் என்பன போன்ற எண்ணிறந்த எண்ணங்கள் அவர்மனத்து எழுந்தன. அர்ச்சையில் எழுந்தருளிய இறைவன் அங்ஙனம் செய்யான் எனத்தெரியவில்லை ஆழ்வாருக்கு. பக்தியின் மிகுதியால் அவ்வளவு கலக்கம் ஏற்பட்டு விட்டது!

மெல்லிய தாளால் வன்மாவையம் அளந்த வருத்தத்தினுல் போலும் வாளாகிடந்து வாய்திறவாதிருக்கிருனென்று நினைக்கிருர். என்னே பரிவு! என்னே பக்தி! கடற்கரையில் கிடப்பது ச்ரமபரிஹாரத்திற்காக என்பது ஆழ்வார் நினைவு.

இது தற்குறிப்பேற்ற அணி.

---

# திருமங்கையாழ்வார் அநுபவம்

## பொதுத் தனியன்கள்.

### மணவாளமாமுனிகள் தனியன்

(நம்பெருமாள் அருளிச்செய்தது)

**ஸ்ரீ சைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதி குணர்ணவம் |**
**யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||**

### குருபரம்பரையின் தனியன்

(ஆழ்வான் அருளிச்செய்தது)

**லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் |**
**அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம் ||**

### எம்பெருமானர் தனியன்

(இதுவும் ஆழ்வான் அருளிச்செய்தது)

**யோநித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம**
**வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணயமேநே |**
**அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:**
**ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ||**

## நம்மாழ்வார் தனியன்

(ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்தது)

**மாதாபிதாயுவதயஸ் தநயாவிபூதி:**
**ஸர்வம்யதேவ நியமேந மதந்வயாநாம் |**
**ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்**
**ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||**

## ஆழ்வார்கள் உடையவர் தனியன்

(ஸ்ரீ பட்டர் அருளிச்செய்தது)

**பூதம் ஸரஸ்ய மஹதாஹ்வய பட்டநாத**
**ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந் |**
**பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்**
**ஸ்ரீமத் பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||**

## திருமங்கையாழ்வாரைப்பற்றிய சிறப்புத் தனியன்களும் விரிவுரையும்

திருக்கோட்டியூர் நம்பி அருளியது

**கலயாமிகலித்வம்சம் கவிம் லோக திவாகரம் |**
**யஸ்யகோபி: ப்ரகாசாபி: ஆவித்யம் நிஹதந்தம: ||**

(இ-ள்) யஸ்ய-யவருடைய, ப்ரகாசாபி:-பிரகாசமான, கோபி:-ஒளிகளினாலே, சொற்களினாலே, ஆவித்யம்-அஞ்ஞானத்தினாலுண்டான, தம:-இருள், நிஹதம்-போக்கடிக்கப்பட்டதோ, தம்-அப்படிப்பட்ட, லோகதிவாகரம்-உலகிற்குச் சூரியனை, கலித்வம்சம் கவிம்-கலி கன்றி என்னும் திருமங்கையாழ்வாராகிய கவியை, கலயாமி-கருதுகிறேன்; (எ-று)

இது, திருமங்கையாழ்வாரைச் சூரியனாகக் கூறி அவரைத் தியானம் செய்கிறேன் என்கிறது.

இந்தச் சுலோகமும் மேலுள்ள செய்யுட்களும் சிறப்புப்பாயிரமாம். வைஷ்ணவ நூல்களிற் சிறப்புப்பாயிரம் தனியன் எனப்படும். நூலுக்குத் தனிப்பட்டுநிற்றலால் தனியன் ஆயிற்றுப் போலும். விலக்ஷணமான பொருளைத் தெரிவித்தலால், தனியன் என்னவுமாம்.

கலிகன்றி கலியன் என்பவை திருமங்கையாழ்வார். திருநாமங்கள்: அப்பொருளிலேயே வடமொழியில் கலித்வம்சம் என்று கூறப்பட்டது. கவியெனப் பொது வாகக்கூறுதலான், ஆசு, மதுரம், சித்ரம், விஸ்தாரம் எனும் நால்வகைக் கவியிலும் வல்லுநர் என்பது போதரும். “நாலுகவிப் பெருமாள்” என்ற பிரஸித்தி இவருக்கு உள்ளமை இங்கு அறியத்தக்கது.

இனி, ‘கவிః க்ராந்த தர்சி’ என்றபடி கவி சப்தத்துக்குப் ப்ரத்யக்ஷத்திற்கும் அநுமாநத்திற்கும் புலனாகாது அப்பாற்பட்ட பரம்பொருளை, மயர்வற மதிநலமருளப் பெற்றுக் கண்டறிந்தவர் என்றும் பொருள் கூறலாம்.

தமது நூல்களினால் அறிவொளியை உலகில் பரப்புவதினால் ஆழ்வார் உலகிற்குச் சூரியன் ஆயினார். ‘கோ’ சப்தம் ஒளி, சொல் என்னும் இரண்டு பொருள் உடையது. சொல்லுக்குப் பிரகாசமாவது பொருள் விளங்கு நடையாயிருத்தல். சூரியன் தன் கோக்களினால் புறவிருளைப் போக்குகிறான். இவர் தம் கோக்களினால் அகவிருளைப் போக்குகிறார். “நெஞ்சுக்கு இருள்கடி தீபம்” என்று இவர் ஸ்ரீஸூக்திகள் அகவிருளைப்போக்குவது மேலும் பேசப்படுதல் காண்க.

எம்பெருமானார் அருளியது

***வாழி பரகாலன் வாழி கலிகன்றி***
***வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ***
***மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்***
***தூயோன் சுடர்மான வேல்.***

பிறருக்கு யமன்போன்றவர் வாழ்க: கலியை நீக்குபவர் வாழ்க: திருக்குறையலூரில் வாழும் அரசர் வாழ்க: இறைவனிடம் வாளின்வலிமையினால் திருமந்திரத்தைக் கொண்ட பரிசுத்தரான மங்கைநகரத்தாருக்குத் தலைவராம் திருமங்கைமன்னனது ஒளிவிடும் பெருமை பொருந்திய வேல் வாழ்க; (எ. று.)

இது, அரியநூல்கள் ஆறு அருளிய ஆழ்வாருடைய பல திருநாமங்களை வாயாரக்கூறி அவரையும் அவரது வேலாயுதத்தையும் வாழ்த்துகிறது.

இவ்வாழ்வாருக்குப் 'பரகாலன்' என்பது ஒரு திருநாமம். இவர் புறமதத்தவருக்கு யமன்போன்று இருத்தலான் பரகாலன் எனப்பட்டார். [பரர்-பிறர் ; காலன்-யமன்.] புறசமயக் கோட்பாடுகளைத் தலையெடாதவாறு தடிபவர் என்பது கருத்து. இவரது நூல்களில் ஆங்காங்கே புறசமயங்கள் கண்டிக்கப்படுவதைக் காணலாம். பிறமதங்களைக் கண்டித்து நம் மதக்கோட்பாடுகளை விளக்கும் ஆசிரியரை இங்ஙனம் சிறப்பித்துக் கூறுவது நம்மவர் வழக்கு. விஷ்ணுபுராணம் இயற்றிய முனிவரைப் 'பராசரர்' என்றும், திருவாய்மொழி அருளிச் செய்த நம்மாழ்வாரைப் 'பராங்குசர்' என்றும் வழங்குவது அறியத்தக்கது.

'கலிகன்றி' என்பது இவர்க்கு மற்றொரு திருநாமம். "கலியுங் கெடும் கண்டு கொண்மின்" என்று நம்மாழ்வார்

இவரால் கலிகெடும் என்று குறித்திருப்பதாக வைஷ்ணவ ஸம்பிரதாயம் வல்லார் கூறுவர். கலியைக் கெடுத்தலாவது-கலிதோஷத்தை விலக்குதல். கலிதோஷமாவது-பகவத்பக்தியில்லாமை: இவரது நூல்களால் பக்திதழைத் தோங்கவே கலிதோஷம் நீங்கிற்று என்க.

குறையலூர் இவரது அவதாரஸ்தலம். மாயோன்-மஹாவிஷ்ணு: கிருஷ்ணன் என்னும் பொருளில் இது வழங்குகிறது. கிருஷ்ணன்-கரியவன்; மா-கருமை. "மாயோன்மேய காடுறையுலகமும்" என்பது தொல்காப்பியம். இனி, மாயையை உடையவன் மாயோன் எனக்கொண்டு, ஆச்சரியமானவன் என்றும் பொருள் கூறலாம். அப்பொழுது எல்லாம் வல்ல இறைவன் இவ் வாழ்வாரது வாள்வலிக்குத் தோற்றுச் செயலற்று நின்ற ஆச்சரியத்தை நினைக்கிறது.

ஒரு குரு, ஓராண்டு உடனிருந்து பணிவிடை புரியாதவனுக்கு உபதேசம் செய்யலாகாது என்பது இறைவனிட்ட கட்டளை. ஆனால் இவ்வாழ்வாரோ, பணிவிடை புரியாததோடு வாளைக்காட்டிப் பயமுறுத்தி அவ்விறைவனிடமிருந்தே மந்திரோபதேசம் பெற்றுவிட்டார். பயந்து நடுங்கிய இறைவன் மற்றைப் பொருள்களைப்போலவே திருமந்திரத்தையும் பறிகொடுத்து விட்டானும். என்னே ஆழ்வாரது வாள்வலி! என்னே இறைவனது எளிநிலை! "வாள்வலியால் மந்திரங்கொள்" என்னும் சொற்றொடர் அமைதி இவ்விஷயத்தைச் சித்திரிக்கும் அழகு கண்டு களிக்கற்பாற்று.

இறைவன், மந்திரத்தைக் கொள்ளும்படி தன்னை எளியனாக்கி, அம்மந்திரத்தோடு தன்னையும் இவருக்குக் காட்டிக்கொடுத்து, தன்னையே பரம ப்ரயோஜனமாகவும்

உணர்த்தினுனை யால் அவ்விறைவனையே உபாயமென்றும், பேறு என்றும் இவர் கருதுவாராயினர். இறைவனைத் தவிர வேறு உபாயத்தையோ, வேறு பிரயோஜனத்தையோ பற்றுதல் தூய்மையில்லாமையிற்சேரும். இவர் அங்ஙனமன்றி, இறைவனையே உபாயமாகவும், பேருகவும் பற்றி நின்றமையின் 'தூயோன்' எனப்பட்டார்.

'வாள்வீசும் பரகாலன்,' 'கொற்றவேல் பரகாலன்' என்றபடி இவருடைய ஆயுதங்களில் முக்கியமான வாளும் வேலும் இச்செய்யுளில் குறிக்கப்பட்டு உள்ளன.

பரகாலன் வாழி, கலிகன்றி வாழி, வேந்தன் வாழி. மங்கையர்கோன் வேல் வாழி என்று தனித்தனியே பிரயோகித்த "வாழி" என்னும் சொல், இவ்வெண்பாவின் ஆசிரியராகிய எம்பெருமானார்க்கு ஆழ்வாரிடம் உள்ள அளவுகடந்த ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது, மாயோனை-உருபுமயக்கம்.

## ஆழ்வான் அருளிச்செய்தது

*நெஞ்சுக்(கு) இருள்கடி தீபம் அடங்கா நெடும்பிறவி*
*நஞ்சுக்கு நல்லஅமுதம் தமிழ நன்னூல் துறைகள்*
*அஞ்சுக் (கு) இலக்கியம் ஆரண சாரம் பரசமயப்*
*—பஞ்சுக் (கு) அனலின் பொறி பரகாலன் பனுவல்களே.*

பரகாலன் அருளிய பிரபந்தங்கள் நெஞ்சிலுண்டான அஞ்ஞான இருளைப் போக்கடிக்கும் விளக்காகும். கட்டுப்படாத நீண்ட பிறவியாகிய நஞ்சை மாற்றுவதற்கு நல்ல அமுதமாகும். தமிழ் மொழியிலாகிய நல்ல நூல்களிற் கூறப்பட்டுள்ள ஐந்து வகைப்பட்ட இலக்கணங்களுக்கும் இலக்கியமாகும். வேதத்தின் ஸாரமாகும். பிற மதங்களாகிய பஞ்சுக்கு நெருப்புப் பொறியாகும்; (எ. று.)

நெஞ்சுக்கு இருள் எனவே அஞ்ஞானம் கூறிய தாயிற்று. கடிதீபம், வினைத்தொகை.

பிறவி, காரணகாரியத்தொடர்ச்சியாய் இடையீடின்றி வருதலின் 'நெடும்பிறவி' என்றார். அது இறைவனலன்றி யாவராலும் அடக்க முடியாதபடி வலியதாகையால் 'அடங்கா நெடும்பிறவி' என்றார்.

இறைவனை யநுபவிக்கவொட்டாமற் செய்து ஆத்மாவை யழிப்பதாகையால் பிறவியை நஞ்சாக உருவகம் செய்தார். அத்தகைய நஞ்சினால் அழியும் ஆத்மாவை உயிர்ப்பித்து இறைவனது அநுபவத்தைத் தருதலால் பனுவல்களை 'நல்ல அமுதம்' என்றார். ஏனைய அமுதம் உடலையழியாது காப்பது; இவ்வமுதமோ ஆத்மாவையே அழியாதுகாக்கின்றது. ஆகையால் 'நல்ல அமுதம்' என்றார். 'நல்ல அமுதம்' என்றதற்கு ஏற்பக் 'கொடிய நஞ்சு' என்று வரவழைத்துப் பொருள் கொள்க.

தமிழ நன்னூல் துறைகள் ஐந்தாவன :— எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. நன்னூல்-நன்மையான நூல் ; பண்புத்தொகை. பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலைக் குறிப்பதாகவும் பொருள் கூறுவர் பிள்ளைலோகஞ்சீயர். தொல்காப்பியத்திற் போலவே நன்னூலிலும் ஐந்து இலக்கணங்கள் முற்காலத்தில் இருந்திருக்கலாமென்று சிலர் அபிப்பிராயம். ஆரணஸாரம்-வடசொற்றொடர்.

அநாயாஸமாகப் பரசமயங்களை அழித்தலால் பரசமயப்பஞ்சுக்கு அனலின் பொறியாயின பரகாலன் பனுவல்கள். கொசுவுக்குப்புகை, நோய்க்கு மருந்து என்பவற்றிற் போல நஞ்சுக்கு அமுதம், பஞ்சுக்கு அனற்பொறி என்ற இடங்களில் பகைப்பொருளில் நான்காம் வேற்றுமை

யுருபு வந்தது: 'துன்பத்திற்கு யாரே துணையாவார்' என்புழிப்போல. இப்பாடல், கட்டளைக் கலித்துறை.

## எம்பார் அருளிச்செய்தது

**எங்கள் கதியே! இராமா நுசமுனியே!**
**சங்கைகெடுத் தாண்டதவ ராசா!—பொங்குபுகழ்**
**மங்கையர்கோன் ஈந்த மறையா யிரமனைத்தும்**
**தங்குமனம் நீயெனக்குத் தா.**

எங்களுக்குப் புகலாயிருப்பவரே! இராமாநுச முனியே! (வேதாந்தங்களில் உள்ள) ஸந்தேஹங்களைப் போக்கிக் காத்த தவச்செல்வரே! பரவுகிற புகழையுடைய திருமங்கை மன்னன் தந்தருளிய வேதமாகிற ஆயிரம் பாட்டுக்கள் முழுதும் தங்குகின்ற மனத்தை நீர் அடியேனுக்குத் தந்தருளவேண்டும்; (எ-று.)

இராமாநுச முனி-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. முனிவர்-இடைவிடாது நினைப்பவர், உலகில் ஆத்மவர்க்கங்கள் உய்யும் வகையே இராமாநுசருடைய நினைப்பாகும்.

வேதாந்த நூல்களில் உள்ள ஐயங்களை எல்லாம் தேவரீர் அறவே நீக்கியருளியதுபோலவே இவ்வாழ்வார் அருளிச்செயல்களையும் மனத்தில் தரிக்கும்படி செய்ய வேண்டும் என்கிறார், "சங்கை கெடுத்தாண்ட" இத்யாதியால்.

தவராசா-தவத்தையுடைய ராசா: இரண்டாம் வேற்றுமையுருபும் பயனுமுடன் தொக்க தொகை. இனி, தவத்திற்கு ராசா என நான்காம் வேற்றுமைத்தொகையாகவுமாம். தவம்-சரணாகதி: சரணாகதி தர்மத்திற்குப் போஷகராகையாலே 'தவராசா' என்கிறது.

பொங்குபுகழ், தங்குமனம்-வினைத்தொகைகள்.

செய்தமறை என்றது ஈந்தமறை என்றார், உலகுய்ய வழங்கிய வள்ளன்மைநோக்கி: இனி, வேதம் போல் இவர் அருளிச்செயல்களும் நித்யம் எனத் தோற்றற்குமாம்.

"ஆயிரம் அனைத்தும்" என்கையாலே ஒன்றுந் தப்பாமே மனத்தில் தங்கவேண்டும் என்றபடி. இனி, ஆயிரமும் அனைத்தும் எனவிரித்துப் பெரிய திருமொழியாயிரமும், அவருடைய ஏனைய பிரபந்தங்களெல்லாமும் என்றும் பொருள் கூறலாம்.

"நீலன் தனக்கு உலகில் இனியான்" என்றபடி திருமங்கையாழ்வாருக்கு இனியருமாய் அவரடிக்கீழ்விள்ளாத அன்பருமாய் அவரது ஒலிமிக்க பாடலையுண்டு தம் உள்ளம் தடித்தவருமாய் இருப்பவராகையாலே, இராமாநுச முனியைத் 'தங்குமனம்தா' என்று கேட்கிறார். இதுபோலவே 'சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந் தரிக்கும் உள்ளம்' பெறுவதற்காக இராமாநுசமுனிமலர்ப் பாதம் வணங்குவதாகத் திருவாய்மொழித்தனியனில் அனந்தாழ்வான் அருளிச்செய்ததும் ஒப்புநோக்கத் தக்கது.

சிறப்புத் தனியன்களும் விரிவுரையும் முற்றும்

# பெரியதிருமொழி

## "விற்பெருவிழவும்"—விரிவுரை

### அவதாரிகை

திருமங்கைமன்னன் பாடியுள்ள தலங்கள் பலவாம். "உலகமேத்தும், கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று, மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே?" என்று எம்பெருமான் கோயில்கொண்ட தலங்களில் ஈடுபடுகையே உய்வு என்பது இவர் ஸித்தாந்தம். இங்ஙனம் ஈடுபட்டுத் திருவல்லிக்கேணியைப் பற்றிப் பாடிய பதிகமாகும் இது. இப்பதிகத்துக்கு முந்திய பதிகத்தில் திருவெவ்வுளூர் இறைவனை யநுபவித்தார். இதில் திருவல்லிக்கேணி இறைவனைக்கண்டு அநுபவிக்கிறார். இறைவனிடம் மேன்மையும், எளிமையும் உண்டு. இப்பதிகத்தில் இறைவனது எண்ணரிய எளிமை கூறப்படுகிறது. இறைவன், ஆங்காங்கே கோயில்கொண்டுள்ள நிலைமையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இராமகிருஷ்ணாதி அவதாரங்களில் கண்ட நற்குணங்கள் அனைத்தும் மாத்திரம் நிரம்பப் பெற்றிருத்தல் ஒருவகை நிலையாம். அந் நற்குணங்களனைத்தும் நிரம்பப் பெற்றிருத்தலோடு இராமகிருஷ்ணாதி அவதாரங்களில் கொண்ட திருமேனி போன்ற வடிவமுங்கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலை மற்றொருவகை நிலையாம். முதலிற்கூறிய வகை ஸ்ரீரங்கம் போன்ற தலங்களிலே காணப்படும். அங்கே அவதார குணங்கள் (ஸௌலப்யம் முதலியவை) மாத்திரம் தோற்றுகின்றன: அவதாரவடிவத்தைக் காணமுடியாது. பின்னர்க் கூறியவகை திருவல்லிக்கேணி போன்ற தலங்களிலே காணப்படும். இங்கு அவதாரத்தின் வடிவத்தையும் நாம்

சேவிக்கலாம்: குணங்களையும் கண்டு அநுபவிக்கலாம். இங்ஙனம், குணம், வடிவம் இரண்டும் காணப்படுதலின் முன்வகையினும் பின்வகை சிறப்புடையது.

இத்தகைய சிறப்புவாய்ந்த திருவல்லிக்கேணியைப் பற்றிய இத்திருமொழி திருமங்கைமன்னன் பெரிய திருமொழியில் சிறப்புற்று விளங்குவதில் வியப்பொன்று மில்லை.

விற்பெரு விழவும் கஞ்சனு மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப் புரமெரி செய்த
சிவனுறு துயர்களை தேவை
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன்தன் தேர்முன் நின்றானைச்
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (1)

கம்ஸன் நடத்திய பெரிய வில்விழவும், கம்ஸனும், மல்வீரரும், யானையும், யானைப்பாகனும் விழும்படியழித்தவனும்: முப்புரங்களை யெரித்த சிவபிரானது மிக்க துன்பத்தை (சாபத்தை)ப்போக்கின தேவனும், எதிரிகள் அழியும்படி கோலைக்கையிலே ஏந்தி, அர்ஜுநனுடைய தேர்முன்னே ஸாரதியாய் நின்றவனும்: சிறிய தாயாகிய கைகேயி சொல்லினால் கிரீடம் ஏந்ாதவனுமாகிய இறைவனைத் திருவல்லிக்கேணியில் நான் கண்டேன்; (எ—று.)

கண்ணன் மதுரையிலே புரிந்த லீலைகளும், அரற்குப் பிச்சை பெய்ததும், இராமனைய் அரசுதுறந்ததும் இப்பாசுரத்திலே பேசப்படுகின்றன.

கம்ஸன், கண்ணனைக் கொல்லும் நோக்கத்துடன் வில் விழா நடத்துகிறானதலின், அதனைப் பெருமையாய்

நடத்தப் பாரிப்புக் கொண்டான். அவனது பாரிப்புக்கு ஏற்பப் "பெருவிழவு" என்கிறார்.

இனி "விற்பெரு விழவும்" என்பதற்கு உம்மைத் தொகையாகக் கொண்டு வில்லும் பெருவிழவும் எனப் பொருள் கூறுவாருமுளர்.

மல்-ஆகுபெயர் : மல்லரைக் குறிக்கும்.

கம்ஸன் எந்த வில்விழாவில் கண்ணனைக் கொல்லக் கருதினனோ அந்த விழாவேவீழ்ந்தது ; அதாவது அழிந்தது. இனி அதை நடத்துவானாய்த் தன்னைமதித்த கம்ஸனும் வீழ்ந்தான். அவனுக்கு உறுதுணையாய் நின்ற மல்லரும்வீழ்ந்தனர். அவரினும் கொடிய "குவலயாபீடம்" எனும் வேழமும் வீழ்ந்தது. வீழ்ந்த அவ்வேழத்தையும் நடத்தவல்ல பாகனும் வீழ்ந்தான். இவ்வாறு வீழச் செற்றான் கண்ணன். இலக்குவன் செய்த மூக்கரிதல் போன்ற செயல், இராமன் செயலாகப் பிராதாந்யம் பற்றிக் கூறப்படுதல்போல, பலராமன் செய்த செயல் கண்ணன் செயலாக இங்கே கூறப்படுவதும் பொருந்தும் என்க.

இச்செயல்கள் வெவ்வேறு காலத்தில் நிகழ்ந்தனவாயினும், விரைவுபற்றி "வீழச்செற்றவன் தன்னை" என்று ஒரே சமயத்தில் நிகழ்ந்த செயல் போலக் கூறுகிறார்.

முதலடியில் கூறியவரலாறு புராணங்களில் கீழ் வருமாறு கூறப்பட்டுள்ளது :—

கம்ஸன் பலராமனையும் கண்ணனையும் கொல்லக்கருதி அக்ரூரனைக் கொண்டு அவர்களை வரவழைத்தான். வந்த சிறுவர் வண்ணானைவதைத்து ஆடையுடுத்து, மாலாகாரர் அளித்த பூச்சூடி, கூனிதந்த சந்தனம்பூசி, விழாவிற்கு

உரிய வில் வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அடைந்தனர். அங்கு உள்ள காவலாளரிடம் வில்லைப்பற்றிக் கேட்டறிந்து கொண்டனர். கண்ணன், நாணேற்றி அந்த வில்லை முறித்து எறிந்தான். எதிர்த்த காவலாளரை இருவரும் அழித்தனர். பிறகு மெல்ல நகைத்துக் கொண்டே கம்ஸனது அரண்மனை வாயிலை இருவரும் எய்தினர். எய்தியதும் வாயிலில் இவரைக் கொல்வதற்கென்றே நிறுத்தப்பட்டிருந்த "குவலயாபீடம்" என்ற மதம் பிடித்தயானையைப் பாகன் செலுத்தினான். அது சினந்து விரைந்து இவரைக் குறித்து ஓடிவந்தது. வந்த யானையைத் துதிக்கையைப் பற்றியிழுத்துக் கண்ணன் சுழற்றினன். அதனுடைய இடக் கொம்பைப் பிடுங்கிப் பாகன் தலையில் அறைந்தான். அவன் தலை நூறு சுக்கலாக நொறுங்கி விட்டது. வலக் கொம்பைப் பறித்துப் பலராமன், பக்கத்தில் உள்ளவரைச் கொன்றனன். கொன்று இடக் காலினால் கோபத்தோடு யானையின் மத்தகத்தில் உதைத்தான். அது கீழே சாய்ந்து மாய்ந்தது. மாயவே கம்பீரமாய் இருவரும் கம்ஸன் சபைக்குள் நுழைந்தனர். "சாணூரன்" என்னும் மல்லன் கண்ணனையும், "முஷ்டிகன்" என்னும் மல்லன் பலராமனையும் எதிர்த்துப் பொருதனர். இருமல்லரும் முறையே இருவராலும் உடைந்து மடிந்தொழிந்தனர். மற்ற மல்லர் மடிந்தும் மறைந்தும் போயினர். கம்ஸன் சினந்தான். அவன் கண்கள் சிவந்தன. சிறுவரைச் சபையினின்றும் வெளியேற்றக் கட்டளையிட்டனன். நந்தகோபருக்கு விலங்கிடச் சொன்னான். கண்ணனுக்கு அதைக் கேட்டதும் சிரிப்பு வந்தது. ஒரே துள்ளில் அவன், கம்ஸனது ஸிம்ஹாஸனத்தில் குதித்தான். அவன் தலைமயிரைப் பிடித்து இழுத்தான். அவனது கிரீடம் கீழேவிழ்ந்தது. தரையில், அவனைத்தள்ளிக் கண்ணன்,

அவன்மீது தானும் வீழ்ந்தான். உலகையெல்லாம் தன்னுள் ஒடுக்கிய கண்ணனைக் கம்ஸன் எங்ஙனம் தாங்குவான்? தாங்காது உயிர் நீத்தான்.

இப்பாசுரத்தில் இவ்வரலாற்றில் உள்ள முறை கையாளப்படவில்லை; இனி, கடையில் கூறிய பாகனை முதலாகக் கொண்டு பார்த்தால், பாகனும் வேழமும், மல்லும் கஞ்சனும், விற்பெருவிழவும் என்று இவ்வரலாற்றிலுள்ள முறை பொருந்தியிருப்பதும் கண்டுகொள்வது.

ஸர்வ வல்லமையுள்ளவனாய் மதிக்கத்தக்க சிவபிரானும், தன் துயர்களைய இயலாதவனாயினான் என்பார், "புரமெரி செய்த சிவன்" என்றார். 'புரம்' என்பது விடாத இலக்கணையால் (அஜஹல்லக்ஷணையால்) முப்புரங்களையும், ஆண்ட அசுரரையும் குறிக்கிறது. சிவன்—மங்களகரமானவன்; அவன் துயரடைந்த வியப்பு 'சிவன்' என்னும் சொல்லில் தோற்றுகிறது.

உறுதுயர்-மிக்கதுயர். உறு-உரிச்சொல் "குருபாதகம்" என்றார் ஆளவந்தாரும். உறுதுயராவது-பிரமனது தலையைக் கிள்ளியெறிந்ததால் ஏற்பட்ட பிரும்மஹத்தையினால் கபாலத்தில் பிச்சையேற்று அலைந்தது. சிவன் உறுதுயர்- நம்மைப்போலல்லாது சிவன் பெருமையுடையவனாதலின், அவனுக்கேற்ப துயர், 'உறுதுயர்'' ஆயிற்று. நமக்கு வாதம் வந்தால் "ஆனைக்கால்'' வந்துவிடுகிறது. யானைக்கு ஆனைக்கால் வந்தால்?

இனி, உறுதுயர்-வினைத்தொகையாகவுமாம். உறுதுயர்-உறுகிற துயர் எனவிரியும். உறுதல்-அடைதல். களைதேவு-களைகிறதேவு, வினைத்தொகை. உற்றதுயரைக் களைந்ததேவு என்னாது 'உறுதுயர்' 'களைதேவு' என வினைத்தொகையாகக் கூறியிருத்தலின், பலகால் சிவபிரான்

துயருறுதலும் ஸர்வேச்வரன் அவைகளைக் களைதலும் இயல்பெனத் தோற்றுகிறது. 'கொல்யானை' என்றால் கொல்லும் இயல்புடைய யானை எனப் பொருள்படுதல் காண்க.

தேவு-தேவ என்னும் வடசொல் திரிபு. இதைத் தனித் தமிழ்ச்சொல் என்பாரும் உளர். துயர்களைபவனே தேவன். அவனே வணங்கத்தக்கவன் என்பது ஆழ்வாரது முடிவு.

'விழச் செற்றவன்' என்று முன்னும், 'தேர்முன் நின்றான்' என்று பின்னும் கண்ணன் லீலைகளையே அநுபவிக்கும் ஆழ்வார், இடையே சிவன் உறுதுயர்களைதலைக் கூறியிருப்பது, இதுவும் கண்ணனது லீலையே என்னும் கருத்தினால் போலும்! "அரற்குப்பிச்சை பெய் கோபால கோளரி" என்றார் நம்மாழ்வாரும். ஸிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களெல்லாம் கண்ணன் செயலாகக் கூறப்பட்டிருப்பதும் இங்கு அறியத்தக்கது.

முப்புரமெரித்தவரலாறு:—வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என மூன்று அசுரர் இருந்தனர். அவர்கள் கொடுந்தவம்புரிந்து முறையே தங்கம், வெள்ளி, இரும்பு இவற்றாலாய அரணமைந்த மூன்று புரங்கள் பெற்றனர். அவை, ஆகாயத்தில் செல்லக் கூடியவை. அவ்வசுரர் நினைத்த இடங்களுக்கு அப்புரங்களோடு பறந்து சென்று இவ்வுலகைத் துன்புறுத்திவந்தனர். இதனைச் சிவபிரானிடம் தேவரும் முனிவரும் முறையிட்டனர். அப்பிரான், பூமியைத் தேராகவும், சூரிய சந்திரரைத் தேர்ச் சக்கரங்களாகவும், நால் வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவுங் கொண்டு போர்

செய்து தன் அட்டஹாஸத்தாலேயே அவ்வசுரரை அப் புரங்களோடு எரித்திட்டான் என்பது. இவ்வரலாறு யஜுர் வேதத்திலும் (ஸம்: 6. 2. 3) சுருங்கக்கூறப் பட்டுள்ளது.

துயர்களைந்த வரலாறு :— ஒரு சமயம் சிவபிரான் தன்னைப்போல ஐந்து முகங்கள் படைத்த பிரமன் தலையொன்றைக்கிள்ளி எறிந்தனன். அப்பிரமன் இட்ட சாபத்தால் கையிற் கபாலத்துடன் சிவபிரான் பிச்சை எடுத்துத் திரிந்தனன். கையில் கபாலம் நிறைந்தால்தான் அச்சாபம் நீங்கும். எங்கும் கபாலம் நிறையவில்லை. இறுதியில் இமயமலையில் மஹாவிஷ்ணுவிடம் பிச்சை யிரந்தான். அவன் தன் இரத்தத்தைப் பிச்சைப் பாத்திர மாகிய கபாலத்தில் பெய்தனன். பெய்யவே கபாலம் நிறைந்து வெடித்துக் கையைவிட்டகன்றது என்பது.

இவ்வரலாறு மாத்ஸ்ய புராணத்தில் கண்டது. இது போல் அந்தகாசுரன் வரலாறு, விருகாசுரன் வரலாறு களிலும் சிவனது துயர்களைந்தது அறியத்தக்கது. புராணம் வல்லார்வாய் இவ்வரலாறுகளைக் கேட்டு அறிக.

அர்ஜுனனும் துரியோதனனும் ஒரே சமயத்தில் கண்ணனைப் போர்க்குத் துணைபுரியுமாறு வேண்டச் சென்றனர். கையில் ஆயுதமெடுத்துப் போராடாமற் போனாலும் கண்ணன் தன் பக்கத்தில் இருந்தால் போது மென்று கண்ணனையே அர்ஜுனன் வேண்டினான். 'ஆயுத மெடாத கண்ணனால் யாதுபயன் ?' என்று துரியோதனன் அவன் கொடுத்த படைகளைக் கூட்டிச் சென்றான். ஆகை யால் கையில் படைதொடாத கண்ணன் கோலேந்தி அர்ஜு னனுக்குச் சாரதியாய்த் தேர் ஓட்டினான். துரியோதனன் "தேரோட்டிதானே கண்ணன்" என இகழ்ந்திருந்தான்.

அவன் கண்டானு உண்மையை? ஆழ்வார் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவராகையால் அவருக்கு உண்மை தெரியவந்தது. கண்ணன் கையில் உள்ளது குதிரையோட்டும் வெறுங்கோலன்று; அதுதான் எதிரிகளைக் கொல்வது என்கிறார் "பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு" என்று. "சொல்லா மாக்கோல் கொலை செய்து" என்றார் ஸ்வாமி நம்மாழ்வாரும். இன்ன ஆயுதந்தான் வேண்டும் என்கிற நியதியில்லை கண்ணனுக்கு: அவன் கையில் எடுத்தவையெல்லாம் ஆயுதந்தான். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அன்றோ?

இனி "பற்றலர்வீய" என்பதை "நின்றனை" என்பதோடு கூட்டிப் பொருள் கூறலுமாம். அப்பொழுது பார்த்தன் தேரில் கண்ணன் நிற்றலே பற்றலர் வீதலுக்கு ஏதுவாயிற்று என்று தேறும். "எவ்விடத்தில் கண்ணனோ, எவ்விடத்தில் வில்லாளியான பார்த்தனோ அவ்விடத்தில் செல்வம் வெற்றி முதலியன நிச்சயம்" என்று கூறும் கீதை சுலோகம் இங்கு அநுஸந்திக்கத்தகும். அது :—

*யத்ர யோகேச்வர: க்ருஷ்ணோ யத்ரபார்த்தோ தநுர்தர: |*
*தத்ர ஸ்ரீர்விஜயோ பூதிர் த்ருவா நீதிர் மதிர்மம ||*

"படையெல்லாம் பாரதத்து, விண்ணின் மீதேற விசயன் தேர் ஊர்ந்தானை" என்று இவ்வாழ்வாரே மற்றோரிடத்தில் அருளியிருப்பதும் இங்கு அறியத்தக்கது.

பற்றலர்-சத்துருக்கள். துரியோதனாதியரைத் தன் சத்துருவாகவே நினைத்துக் கண்ணன் இதனைச் செய்தலின், "பற்றலர்வீய" என்றார். கண்ணன் என்னும் கருந்தெய்வம் யாவர்க்கும் பொதுவாயினும், தன்னடியாரது விரோதியைத் தன் விரோதியாகக் கருதுவது கூடும் என்க. "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" என்று கண்ணனே துரியோதனனை நோக்கிச் சத்துருவான உனது

சோற்றைத் தின்னலாகாது எனக்கூறியதும் இங்கு அறியத்தக்கது.

இனி, பகைவர் என்னது 'பற்றலர்' என்றது, உண்மையில் கண்ணனுக்குப் பகையின்மை கருதி என்னவுமாம். பற்றலர்-ஸ்நேகஹமில்லாதவர். பாண்டவர் வாழ்தலும் துரியோதனாதியர் வீதலும் முறையே கண்ணன்பால் பற்றுடைமையாலும், பற்றிலாமையாலும் என்க. இராவணனைக்கூடப் பகைவனாகக் கருதாது அவனோடு சேர ஆசைப்பட்டு, சேராத நிலையிலே அவனை அழித்தவன் அன்றோ கண்ணன்? "சேராக்குலைகொண்ட ஈரைந்தலையான் இலங்கையை ஈடழித்த கூரம்பன்" என்று பெரியாரும் பணித்தார். அத்தகைய கண்ணன் துரியோதனாதியரோடு சேராமையாலன்று அவர்களை அழியச் செய்தது; பின்னை அவர் பற்றிலாமையாலே தாமே வீந்தனர் என்க.

'பற்றலர்வீயக் கோல்கொண்டு' என்ன அமைந்திருக்க "கையில்" எனவேண்டாது கூறினர், கையும் கோலுமாகத் தாம் கையார் சக்கரத்தனைக் கண்ட அழகை வெளியிடற்கு என்க.

தேவர்கள், பசுமேய்ப்பவன் போலக் கையில் கோல்கொண்டு ரக்ஷிப்பதில்லை: எவரை ரக்ஷிக்கவேண்டுமோ அவருக்கு நல்லறிவு புகட்டுகிறார்கள் என்று ஒரு சுலோகம் கூறுகிறது.

" நதேவா யஷ்டி மாதாய ரக்ஷந்தி பசுபாலவத் |
யம்ஹி ரக்ஷிதுமிச்சந்தி புத்யா ஸம்யோஜயந்தி தம் " ||

என்பது அந்தச் சலோகம். தேவாதி தேவனாகிய கண்ணனே, பசு மேய்ப்பவனானதற்கு ஏற்பக் கையில் கோல்கொண்டு முன்னின்று காப்பாற்றுகிறான்.

[இப்பாசுரத்தில், 'கோல்' என்றது குதிரையோட்டும் சம்மட்டியைக் காட்டும்] இதனால் அவன் தெய்வத்தன்மை மறைந்து விடும்போலும்! என்னே அவதாரத்தின் மெய்ப்பாடு! என்று தம் ஈடுபாட்டையெல்லாம் ஆழ்வார் "கோல் கொண்டு தேர்முன் நின்றானை" என்ற சொற்றொடரில் வெளிப்படுத்துகிறார்.

வெற்றி பாண்டவர்களெவர்க்கும் ஒரு சேரவாயினும் "பாண்டவாநாம் தநஞ்சய:" என்றபடி, அவர்களிற் சிறந்த நண்பனாய்க் கருதுவது அர்ஜுநனையே யாகையால், 'பார்த்தன்தன் தேர்முன் நின்றான்' என்றார். நட்பு மாத்திரமன்றி அத்தைமகன் என்று உறவுமுறையும் காட்டுவார் "பார்த்தன்" என்றார். பார்த்தன்—பிருதையின் மகன்; [பிருதை—குந்தி] வடசொல்: தத்திதவிருத்தி.

"கண்ணன் பாண்டவர்களுக்கு வெற்றியைக்கொடுக்கட்டும். அர்ஜுநனுக்குத் துணைவனாயிருக்கட்டும், யுத்தகளத்திலும் வந்து நிற்கவேண்டுமோ! நிற்கட்டும். தேரின் முன்னே ஸாரதியாயும் நிற்கவேண்டுமோ! போர்புரியும் போது எதிரிகள், ரதியை அடிப்பதற்குமுன்பே அம்புக்கு இலக்காக்குவது ஸாரதியை அன்றோ!" என்ற கழிவிரக்கந்தோன்ற "ஸாரதியை" என்னாது "தேர்முன் நின்றானை" என்ற அழகு பெரிதும் பாராட்டற்பாலது. இதனால், அடியாரது துன்பத்தை இறைவன் தானே ஏற்றுக்காக்கும் சிறந்தபண்பு வெளியாகிறது. அர்ஜுநனை நோக்கிப் பகதத்தன் எறிந்த சக்தி ஆயுதத்தைப் பார்த்தஸாரதி தன் மார்பிலேற்று அவனைப் பாதுகாத்த வரலாறும் இங்கு அறியத்தக்கது.

'கோல்கொண்டு தேர்முன் நின்றான்' என்ற சொற்றொடரின் ஆற்றலால் கண்ணன் ஸாரதியாயிருந்தமை

பெற்றும். "கொள்வார் கோல்கோள்ளக் கொடித்திண் டேரேறுவோர்" என்று பரிபாடலில் (பாடல் 11-வரி 51) 'கோல்கொள்ளல்' என்பது ஸாரதியாயிருத்தல் என்ற பொருளில் வழங்கப்பட்டிருப்பது காண்க. "மாதலி தேர் முன்பு கோல் கோள்ள" என்றாள் ஸ்ரீ ஆண்டாளும்.

இதுகாறும் இறைவனுயிருந்தும், அடியார்க்குத் தேரோட்டி ஏவற்றொழில் புரிந்த எளிமையில் ஈடுபட்டுப் பேசினர் இனி, போலி அன்புடையார்க்கும் ஏவல் தொழில்புரிந்த இராமன் வரலாறு கூறுகிறார். மாற்றாந் தாயாகிய கைகேயி இராமனுக்குத் தீங்குநினைந்து தந்தை ஏவியதாக அவனைக் காட்டுக்குப் போகச் சொன்னாள். தனது கொடுஞ்சொல்லை ஒருகால் இராமன் மறுத்து விடுவனோ என ஐயுற்றுக் கைகேயி, தந்தை ஏவியதாகக் கூறினாள். இராமனோ, நம்தாயே ஐயுறுகின்றனளே என வருந்திக் கைகேயியை நோக்கி, "அரசன் ஆணையாகக் கூறவேண்டுமோ? அவனிலும் மேம்பட்டவராகவன்றோ உம்மை யான் மதித்திருப்பது! மன்னவன் பணியன்றாகில் நும்பணிமறுப்பனோ?" என்று தாயின் கட்டளையென்றே முடிதுறந்து கானகத்திற்கு விரைந்தனன். எனவே, இராமன் கானகம்சென்றது தந்தையின் பணியினாலன்று, தாயின்பணியினாலேயே என்று, சிற்றவைபணியால் முடிதுறந்ததாகக் கூறினார். கைகேயியை "சிற்றவை" என்றது குறிக்கொள்ளத்தக்கது. சிறியதாய்: பெற்ற தாயல்லள்; மாற்றாந்தாய்; 'கொடியவனம்போ' என்ற கூற்றுத்தாய்; தாயென நினைவான் முன்னர்க் கூற்றென வந்து நின்று கூறினாளன்றோ? தாய்முறையில் மட்டுமன்று, அறிவிலுங்கூடச் சிறியவள் தான். ஆயினும், அவள் ஏவியதை இராமன் செய்தான் என்றால், அஃது எப்படிப்பட்ட குணம்!!.

ஏவியதும் சாதாரணமான செயலிலா? பிறப்பதற்கு முன்பும் (இறைவனான நிலையிலும்) மூத்தமகனாய்ப் பிறந்ததற்குப் பின்பும் இவனுக்கே உரிய முடியையல்லவா துறக்கச்சொல்லுகிறாள். அத்தகைய முடியை–பேரரசை அலக்ஷ்யமாய்த் துறந்த இராமனது தியாகம் ஆழ்வாரை வசீகரித்து விடுகிறது. பட்டாபிராமனைவிடப் பட்டந் துறந்த இராமன் ஆழ்வார் திருவுள்ளத்தில் இடம் பெற்று விடுகிறான்.

அல்லிமலரை உடைய கேணி–அல்லிக்கேணி: அது ஆகுபெயரால் ஊரைக்குறித்தது. திரு–அழகு; அடைமொழி.

இப்பாசுரத்தில், விரோதிகளைப்போக்கும் இறைவனது திறமும், தற்பெருமை பாராட்டுவோர்க்கும் தயங்காது உபகரிக்குந்தன்மையும், அடியார்க்காகத் தன்நிலைமையேமாறி இழிதொழில் செய்யும் ஏற்றமும், போலியன்பு உடையார்க்கும் ஏவியது செய்து காட்டும் தியாகமும் முறையே பேசப்பட்டன.

பேசிய இத்தன்மைகளை எல்லாம் திருவல்லிக்கேணி எம்பெருமானிடம் கண்டேனென்றாராயிற்று.

வேதத்தை வேதத்தின் சுவைப் பயனை
  விழுமிய முனிவர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக்
  குவலயத்தோர் தொழு தேத்தும்
ஆதியை யமுதை என்னை யாளுடை
  அப்பனை ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழு மாடமா மயிலைத்
  திருவல்லிக் கேணிக்கண் டேனே. (2)

வேதத்தைத் தன்விபூதி(செல்வம்) யாக உடையவனும், வேதத்தில் கூறப்பட்ட, (அவரவர்) ருசிக்குத்தக்க பயனைத் தருபவனும், சிறப்புடைய (ஸநகாதி) முனிவர் விழுங்கும்குற்றமற்ற இனியகனி போன்றவனும், நந்தகோபனது களிறுபோன்றவனும், உலகில் உள்ளாரால் தொழுது ஸ்தோத்திரம் செய்யப்படும் காரணமானவனும், அமுதம போன்றவனும், என்னை யாட்கொண்டவனுமாகிய அப்பனை நிகரில்லாத பெண்மணிகள் வாழும் மாடத்தையுடைய மயிலையையடுத்த திருவல்லிக்கேணியில் கண்டேன்; (எ-று.)

ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினாலும், அநுமாந ப்ரமாணத்தினாலும், அறியாதவற்றை அறிவித்தலின் 'வேதம்' என்று அந்நூலுக்குப் பெயராயிற்று. தமிழிலும் இக்கருத்துப் பற்றியே வேதத்தைப் "புலம்" என்று வழங்குகின்றனர். "புலமும் பூவனுநாற்றமு நீ," என்ற பரிபாடல் (பாடல் 1, வரி 46) காண்க. ப்ரத்யக்ஷ அநுமாநங்களால் அறிய முடியாத தன்னை யறிவிக்கும் வேதத்தை உடையவனை வேதம், என்றே உபசார வழக்கால் கூறினர்.

வேதம் என்பது ஒரு பொது நூல். "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்றான் கீதாசார்யன். ஸத்வம், ரஜஸ், தமஸ் எனப்படும் குணங்களையுடைய யாவருக்கும் வேண்டிய விஷயங்கள் வேதத்தில் உண்டு. அந்தஅந்த குணங்களுக்கு ஏற்ப அவரவருக்கு வெவ்வேறு விஷயங்களில் விருப்பம் உண்டாகலாம். அவரவர் விரும்பிய பயன்களும் வேதத்திலே கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, தமோகுணமுடையவர், தங்களது கீழ்ப்பட்ட குணத்துக்குத் தக்கபடி தம் பகைவருக்குத் தீங்கு இழைக்க நினைப்பர். அவர் நினைத்த பயன் (சத்ருவதம்)

கருதி "ச்யேநம்" என்னும் அபிசாரயாகத்தை அநுஷ்டிக்க வேண்டும் என்று வேதம் விதித்துள்ளது. இவ்விதமே ரஜோகுணம் உடையவர், மழை, பசு முதலிய அற்ப பயனைக்கருதுவர். அவற்றிற்காக, "காரீரி" "சித்ரா" என்ற யாகங்கள் விதிக்கப்பட்டு உள்ளன. உயர்ந்த ஸத்வ குணமுடையவர்களோ, இத்தகைய அல்பமாய் அஸ்திரமா யுள்ள பயன்களைக் கனவிலும் கருதார். அளவும் அழிவு மில்லாத ஆநந்தமயமான பரம்பொருளே அவருக்குப் பயனாக வேதம் ஓதிற்று. ஒரு தாய்க்குத் தன் பல்வகைப் பட்ட மக்களிடத்தில் வேற்றுமை மாற்றிய அன்பு இருப் பது போல, வேதத்துக்கும் ஸாத்விகர், ராஜஸர், தாமஸர் என்ற பல்வகைப்பட்ட மக்களிடத்தும் அபாரமான வாத் ஸல்யம் ஒருபடிப்பட உண்டு. ஆகையால், அவரவர் போக் கிலே வேதமும் ஓதிவைத்தது. சத்ருவதத்தைக் கைகண்ட பயனைக் கண்ட தாமஸர், வேதத்தில் நம்பிக்கைபிறந்து ஸாத்விகராய், இறுதியில் இறைவனையே பயனைக் கருதி நல்வழிப் படக்கூடும் என்பது வேதத்தின் உட்கருத்து. அவரவர் ருசிக்கு ஏற்ற பயனையுந் தருவான் இறைவனே என்பார், "வேதத்தின் சுவைப்பயனை" என்றார். பயனைத் தருவானைப் பயனென்றே கூறினது உபசாரவழக்கு. சுவை-ருசி.

இனி "வேதத்தின் சுவைப் பயன்" என்பதற்கு வேதத்தினுடைய ரஸமான ப்ரயோஜநம் என்று பொருள் கொள்ளவும் இடமுண்டு. "நான்கு வேதப்பயன் என்கோ" என்றார் ஸ்வாமி நம்மாழ்வாரும். 'சதுர்வித வேதங்களின் ப்ரயோஜனம்' என்று அவ்விடத்துப் பன்னீராயிரப்படி உரையும் காண்க. இனி அவ்விடத்து ஈட்டில், மேல் உள்ள 'நூல்' 'இசை' என்பதற்கு ஏற்ப "வேதமாகிற ப்ரயோ ஜநம்" என்று சப்தராசிபரமாகவே இருபெயரொட்டுப்

பண்புத் தொகையாக ஆசிரியர் பொருள் கூறி "வேதத்தில் பயன்" (இறைவனைக் கூறும் அம்சம்) என்னும் பொருளையே மறுத்திருப்பது அறியத்தக்கது. பரமபுருஷார்த்தமாக, வேதத்தில் பிரதிபாதிக்கப்பட்டவன் என்பது இப்பொழுது பொருள் ஆயிற்று.

இனி, அவ்வாறு வேதத்தில் கூறப்பட்ட பயன்களுள் சிறந்தபயனை நற்குணம் உடையோர் பெற்று அநுபவிப்பதைக் காட்டுகிறார், "விழுமிய முனிவர் விழுங்கும் கோதிலின் கனியை" என்று. விழுமிய—சிறிய. முனிவர்—இங்கு ஸநகாதியர். பிரம்மபாவனையிலேயே நிற்றல் ஸநகாதியருக்குச் சிர்மை. பழுத்த பழம்போல் இனியனாயிருத்தல்பற்றி, இறைவனை "கனி" என்கிறார். கர்மபாவனையில் நிற்பவருக்கு இறைவன் காய்போலிருப்பான், அவருக்கு இறைவனது இனிமை பின்னரே தெரியுமாதலின். பிரம்மபாவனையிலே நிற்பவர் அப்பொழுதே பாவிக்கப்படும் இறைவனது இனிமையை நுகர்தலின் அவருக்குக் கனியாகிறான்.

"விழுங்கும் கனி" என்கையாலே மிகக்கனிந்து த்ராக்ஷைப்பழம் போலே ரஸபுஞ்ஜமாயிருத்தல் தோற்றுகிறது. ரஸஸ்வரூபமாகவே இறைவனை வேதமும் ஓதிற்று.

"முனிவர் விழுங்குங் கனி" என்றமையின் நெடுநாளாக மனத்தில் இடைவிடாமல் மநநம் செய்யப்பட்ட கனியைக் கண்டதும், வாரி விழுங்கி விடவேண்டும் என்ற முனிவரது ஆர்வமுடைமை தோற்றுகிறது. "வாரிக் கொண்டுன்னை விழுங்குவன் காணில்" என்று ஸ்வாமி நம்மாழ்வாரும் ஆர்வத்தால் பாரித்தமை காண்க.

விழுமிய முனிவர் விழுங்குவதாதலின் "கோதில் இன்கனி" என்றார்.

இறைவனைக் குற்றமற்றவன் என்றும், குணமுள்ளவன் என்றும் வேதாந்தங்கள் கூறுவதற்கேற்ப, கோதில்லாத இனிய கனி என்றார். கோது-குற்றம்.

ஸநகாதியர் அநுபவிக்கும் இக்கனி நமக்கு எட்டாது அருமைப்பட்டது அன்று என்பார் "நந்தனார் களிற்றை" என்றார். பரம்பொருள் நாமும் அநுபவிக்கலாம்படி நந்தன் மகனாய் எளிமைப்பட்டது என்பது இதன்கருத்து. வஸுதேவர் மகனாய்ப்பிறந்தாலும் "எடுத்த பேராளன்" என்றபடி நந்தகோபர்க்கே மகனாய்ப் பிள்ளையின்பம் கொடுத்தானாதலின் "நந்தனார் களிறு" என்றார். யானை தன்னைப் பிறர் அணுகமுடியாதபடி அருமைப்பட்டிருந்தாலும் பாகனுக்குத் தான் அடங்கி எளிமைப்பட்டிருத்தல் போல, பெறலரும் பரப்பிரம்மமும் நந்தகோபருக்குத் தான் எளிமைப்பட்டபடி. இனி, யானை எப்பொழுதும் காண்டற்கு இனிதாயிருப்பது போலத் தன் அதிமாநுஷ சேஷ்டிதங்களால் நந்தகோபர்க்கு எப்பொழுதும் இனியனாயிருத்தல் பற்றி 'களிறு' என்றாராகவுமாம்.

இனி, "எல்லாவுலகும் கண்ணன் படைப்பு" என்னும் சமத ஸித்தாந்தத்தை வெளியிடுகிறார், "குவலயத்தோர் தொழுதேத்துமாதியை" என்று. குவலயம்—பூமி. இது பிரகிருதி மண்டலத்துக்கே உபலக்ஷணம். ஆகவே, பெற்ற தாயைப் போற்றுதல் போல, கார்யமான பிரகிருதி மண்டலத்தில் உள்ளவர் காரணமான கண்ணனைத் தொழுது ஏத்துதல் பொருந்தும் என்றதாயிற்று. "காரணப் பொருள் தியானிக்கத் தக்கது" என்று சுருதியும் கூறிற்று.

ஆதியைத் தொழுதேத்தினார் முக்திபெற்று அநுபவிக்கும் ப்ராப்யஸ்வரூபத்தைச் சொல்லுகிறார்,

"அமுதை" என்று. "அமுதத்தைக்கண்டு திருப்தியடைகிறார்கள்" என்று ப்ராப்யஸ்வரூபம் சுருதியிலும் 'அமுதம்' எனப்படுவது காண்க.

இத்தகைய இறைவன் தன்மைகளில் தமது ஈடுபாடு தோற்ற "என்னை யாளுடையப்பனை" என்கிறார். ஈண்டு, பெரியோர் கூறுவதொன்றுளது:—

"எந்தை ஒருவல்லித்தாமரையாள் ஒன்றிய சீர்மார்வன் திருவல்லிக்கேணியான்" என்றபடி 'கைரவிணீ' புஷ்கரணிக்கரையில் தோற்றிய வேதவல்லித்தாயார், திருவல்லிக்கேணியானை "என்நாதன்" என்று மணம் புணர்ந்தனளாம்: அதனால், அவ்வெம்பெருமானை வடமொழியில் "மந்நாதர்" என்றும், தென்மொழியில் "என்நாதன்" என்றும் வழங்குகின்றனர். அப்பெருமானையே "என்னையாளுடையப்பனை" என மங்களாசாஸநம் செய்தாரென்பது. (திருவல்லிக்கேணியில் சயனத் திருக்கோலத்தில் உள்ள எம்பெருமானுக்கு இப்பெயர் வழங்குகிறது.)

ஒப்பவரில்லா .. ..................கண்டேனே :—

ஸ்ரீவேதவல்லித்தாயார் அவதரித்துப் பிராதாந்யம் வஹித்த திவ்யதேசம் ஆகையாலே, பிராட்டிபரிகரமான பெண்களுக்கே முக்யத்வம் கொடுத்து "ஒப்பவரில்லா மாதர்கள்வாழும்" என்கிறார். ஒப்பவரில்லாமையைச் சிறப்புக்கு உறுப்பாகச் சொல்லவே, மிக்கவரில்லாமையும் பெற்றும். அத்திவ்ய தேசத்து இருத்தலே வாழ்ச்சி என்பது தோற்ற "வாழும்" என்றார். "வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்" என்றதுங் காண்க. திவ்யதேசத்தில் இருப்பதைவிட வேறு வாழ்ச்சி என்ன இருக்கிறது? அஃது தாளிணைக்கீழ் வாழ்ச்சியன்றோ? மற்றெங்கும் தாழ்ச்சியே. இனி, "வாழும் மாடம்" எனக்கூட்டவுமாம்.

மயிலையை அடுத்த இடமாதலின் "மயிலைத்திருவல் லிக்கேணி" என்றார். "நன்மயிலைத்திருவல்லிக்கேணி நின்றானை" என்பர் இறுதியிலும். "மாமயிலை மாவல்லிக் கேணியான்" என்றார் திருமழிசைப் பிரானும்.

வஞ்சனை செய்யத் தாயுரு ஆகி
வந்தபே யலறி மண்சேர
நஞ்சமர் முலையூ(டு) உயிர்செக உண்ட
நாதனைத் தானவர் கூற்றை
விஞ்சை வானவர் சாரணர் சித்தர்
வியந்துதி செய்யப் பெண்ணுருவாகி
அஞ்சுவை யமுதம் அன்(று) அளித்தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (3)

வஞ்சிப்பதற்காக அசோதையின் வடிவம் எடுத்து வந்த பேயானது கதறித் தரையிலே விழும்படி விஷம் பொருந்திய கொங்கை வழியாக (அவளது) உயிரைச் சாகும்படியாக அமுதுசெய்தருளிய நாதனும், அசுரர்க்குக் கூற்றுவனும், வித்யாதரர் சாரணர் ஸித்தர்கள் ஆச்சரியப் பட்டு ஸ்தோத்திரம் செய்ய மோஹினி வேஷங் கொண்டு அழகிய ரஸமுள்ள அமிருதத்தை அக்காலத்தில் கொடுத்த வனும் ஆகிய ஸர்வேசுவரனைத் திருவல்லிக்கேணியில் கண்டேன்; (எ—று.)

இறைவன், தான் விஷம் உண்டு அடியார்களுக்கு அமுதம் அளிக்கும் குணத்தைப் பேசுகிறார் இப் பாசுரத்தில்.

நாரதர் வாயிலாகத் தன்னைக் கொல்லப் பிறந்தவன் ஒளித்து வளருவதை அறிந்துகொண்ட கம்ஸன், பூதனை என்ற பேயையும் வேறு பல அசுரரையும் ஏவி, உலகில் எல்லாக் குழந்தைகளையும் கொன்றுவிட ஏற்பாடு

செய்தான். அப்பொழுது பூதனை, தாயாகிய அசோதை வடிவத்துடன் வந்து, குழந்தை கண்ணனை எடுத்து அணைத்து விஷப்பால் ஊட்டினாள். கண்ணன், பாலோடு அப்பேயின் உயிரையும் உறிஞ்சி விட்டான். அப்பேய் அலறி மண்மிசை சாய்ந்து மாய்ந்தது.

தாயுருவாகி வஞ்சனை செய்ய வந்தாள். தன் தாயே என்று கண்ணன் ஏமாறுவதற்காகத் தாயுருக்கொண்டு வந்தாள் என்க. 'கண்ணனை வஞ்சனை செய்ய' என்னாது பொதுவாக 'வஞ்சனை செய்ய' என்றமையின் காவலரும் ஏவலரும் தடுக்காதவாறு ஏமாற்றத் தாயுருவாகி வந்தாள் எனவும் கூறலாம். இனி, ஆழ்வார்க்குத் தமது பரிவின் பெருமையால் கண்ணனை வஞ்சிப்பது தம்மை வஞ்சிப்பது போன்றிருப்பவே, அந்த ஏமாற்ற உணர்ச்சி ததும்ப "வஞ்சனை செய்ய வந்த பேய்" என்றாராகவுமாம் : இந்த அழகு ஆழ்ந்து அநுபவிக்கத்தக்கது.

தாயாகி வந்த பேய் என்னாது "தாயுருவாகி" என்றார். உருவம் தாயுருவமாயினும் உள்ளம் தாயுள்ளமன்றே ; பேயுள்ளந்தானே. பேய் தாயாக முடியுமா ? ஆகவே, தாய் வடிவங் கொண்டதற்குத் தக்கபடி முலை கொடுத்தாள் ; பேயுள்ளத்திற்குத் தக்கபடி வஞ்சித்தாள் என்ற பாவம், "தாயுருவாகி வஞ்சனை செய்ய வந்த பேய்" என்ற சொற் சித்திரத்தில் பிரதிபலிப்பதைப் பார்க்கப் பரமாநந்த மாயிருக்கிறது.

அஹல்யையிடம் காமம் கொண்ட தேவேந்திரன் அவளை வஞ்சிக்கக் கருதி—பூதனை தாய் வடிவங் கொண்டு வந்தது போல—க்கௌதமன் வடிவங்கொண்டு புகுந்ததைக் கம்பன் இவ்விதமே சித்திரித்திருப்பது இங்கு நினைவிற்கு வருகிறது. "பொய்யிலா உள்ளத்தான்தன் உருவமே

கொண்டு புக்கான்" என்பது சம்பனது வாக்கு. பொய்யிலா உள்ளத்தான்-கௌதமன். தேவேந்திரன் அன்னனது உருவத்தைக் கொண்டானேயன்றிப் பொய்யில்லாத அவ்வுள்ளத்தைக் கொள்ளமாட்டிற்றிலன் என அவனிழிவு தோன்றக் கூறியிருப்பது இங்கு ஒருபுடை ஒப்புநோக்கத் தக்கது.

மாயமானாய் வந்த மாரீசன் அரக்கனாய் விழுந்து மாய்ந்தது போலத் தாயாய் வந்தவளும் பேயாயலறி மண் சேர்ந்தாள். "கண்சோர வெங்குருதிவந்திழிய வெந்தழல் போல் கூந்தலாள்" மண்சேர்ந்தாள் என்று இவ்வாழ்வாரே பிறிதோரிடத்தில் கூறுகிறார்.

முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றிக் கூறுகிறார், "நஞ்சமர்முலையூடுயிர் செசவுண்ட" என்று; "அவள்பால் உயிர்செகவுண்ட" என்பது திருவாய்மொழியாதலின். "உண்ட" என்பது அந்நச்சுப்பாலை யுணவாகவிரும்பி யருந்தியதைக் காண்பிக்கிறது. "விஷங்கலந்த பால் ஜகத்குரு (கண்ணன்) வுக்கு ரஸிக்கத் தக்கதாயிருந்தது" என்றார் பராசர மஹரிஷி. ஜகத்குரு என்றார் பராசரர்: 'நாதன்' என்றார் திருமங்கை மன்னன். "விடப்பால் அமுதா அமுது செய்திட்டமாயன்" என்றார் ஸ்வாமி நம்மாழ்வாரும். நச்சுப் பாலைக் குடித்துத் தன்னை முடித்துக் கொள்ளாதே, ஈசுவர தத்வத்தை (தன்னை) நாம் அநுபவிக்கலாம்படி கொடுத்து உதவினனே என்ற நன்றிபாராட்டு, "உயிர் செகவுண்ட நாதனை" என்றவிடத்துத் தோற்றுகிறது. உயிர் செகவுண்டு நாதன் ஆயினன். இல்லையானல் நாதன் நசித்திருப்பான் அன்றோ?

கண்ணன் நஞ்சமர்முலையுண்ணும் அறியாத குழந்தையாயின் எங்ஙனம் பேயை முடித்தது? எனின், விளக்கில்

பட்ட விட்டில்போலப் பேய் தானே மாய்ந்தது என்க. இக்கருத்து "தானவர் கூற்றை" என்றவிடத்து அடங்கி யிருத்தல் காண்க. யமன் உயிர்கவர்ந்து சென்றாலும், அவன்பால் கொலைக்குற்றம் சாராததுபோலக் கண்ணன் தானவர் உயிரைக்கவர்ந்தாலும் குற்றமற்றவனே என்க. யமன் தன்செயலை விருப்பு வெறுப்பின்றிச் செய்வது போலக் கண்ணனும் பற்றற்றுச்செய்தலின் அவன் செயல் குற்றமில்லாததாயிற்று.

'தானவர் கூற்றை' என்றவிடத்துப் பூதனைபோல மற்றவசுரர் முடிந்ததும் கருதத்தக்கது.

கீழ், கண்ணனது அசுரரையழிக்கும் இயல்பு கூறப் பட்டது. மேலே தேவஜாதிக்கு அமுது அளித்து உய் வித்தமை கூறப்படுகிறது.

விஞ்சை வானவர்-வித்யையை உடைய தேவர், வித் யாதரர் என்க. வித்யாதரர் சாரணர் சித்தர் என தேவ ஜாதியின் உட்பிரிவுகள் சொல்லப்படுகின்றன.

வியந்துதிசெய்ய-தொகுத்தல் விகாரம்; வியந்து துதி செய்ய எனப்பிரிக்க. வியப்பு-புருஷோத்தமன் ஒரு பெண் ணுருவாயதால் உண்டாயது. துதி-ஸ்துதி. செய்ய-செய் யும்படியாக.

பேய், தனக்குச் சேராத தாயுருக்கொண்டாற்போல, புருஷோத்தமன் தனக்குச் சேராத பெண்ணுருவானான். உருவில் பெண், உள்ளத்தில் ஆண். பெண்ணிற்கு உரிய தண்ணளியில்லை. புருடனுக்கு உரிய முருடைக்கண்டோம். பேய், நாதனை வஞ்சனை செய்யத் தாயுருவாயது; நாதனோ அசுரரை இன்னமுதம் வஞ்சிப்பானாய்ப் பெண்ணுரு வாயினான். பேயின் வஞ்சனை தோற்றது; இறைவன் வஞ்சனைவென்றது.

பெண்ணுருவானது அடியார்க்காக வாதலின், இறைவனுக்கு இழுக்கு ஆகாதென்க. தன்னடியார்க்குத் தாயன்போடு அமுதூளட்டுவான் பெண்ணாயினன். "வானவரைப்பெண்ணாகி அமுதூட்டும் பெருமானார்" என்றார் இவ்வாழ்வாரே பிறிதோர் இடத்தில்.

'தானவர் கூற்றை........பெண்ணுருவாகி அஞ்சுவை யமுதம் அளித்தானை' எனப் பெண்ணுருவிலேயே தான வரிடம் கொடுமையும், தேவரிடம் தாயன்போடு அமுதூட்டும் தன்மையும் தோற்றியவாறு காண்க. "நகை யச்சாக நல்லமிர்துகலந்த, நடுவுநிலைதிறம்பிய நயமிலொரு கை" என்ற பரிபாடலும், ஆங்கு "இருதிறத்தாரும் கடைய ஒருதிறத்தார்க்கே (அமுதை) இட்ட கை 'நடுவு நிலைதிறம்பிய நயமில் ஒருகை' எனப்பட்டது" என்ற பரிமேலழகர் உரையும் இங்குக் கருதத்தக்கன. இதனால், இறைவனது ஆச்ரித பக்ஷபாதம் வெளிப்படுகிறது.

தேவரும் அசுரரும் சேர்ந்து கடல் கடைந்தபொழுது அமிருதம் உண்டாக, அசுரர் அதை வலிவில் கவர்ந்து கொண்டனர். கொள்ளவே, இறைவன் ஒரு பெண் வேஷங்கொண்டு தனது பேரழகால் தானவரை மயக்கி அமிருதத்தைக் கைக்கொண்டு வானவரை அமுது ஊட்டினான் என்பது வரலாறு.

இறைவன் பெண்வேஷங் கொண்டானேயன்றிப் பெண்ணாகவே அவதரித்திலன் என அறிக. அவதாரம் என்பது மானிடவடிவம் முதலியவை போன்ற அமைப்பு உள்ள அப்ராக்ருதமான வடிவைப் புதிதாக எடுத்து நிற்றல். பெண்ணுருவாகி அமுதம் அளித்தநிலையோ சேலைகட்டின புருஷன் நிலையே என்ற வேறுபாடு காண்க. "நண்ணாத வாளவுணர் இடைப்புக்கு வானவரைப்,

பெண்ணாகி யமுதூட்டும் பெருமானார்" என்றவிடத்துப் பெரியவாச்சான்பிள்ளை "புருஷோத்தமனை தன்படிக்குச் சேராத ஸ்திரீவேஷத்தை ஏறிட்டுக் கொண்டு" என்றும், "ஆண்பிள்ளைச் சோருள்வி" (பெண்வேடம் பூண்ட புருடன்) என்றும் அருளியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. ஸ்ரீ பாகவதத்திலும் சிவபிரான் பகவானை நோக்கி

"அவதாரா மயாத்ருஷ்டா ரமமாணஸ்ய தேகுணை: ।
ஸோஹந்தத் தரஷ்டுமிச்சாமி யத்தே யோஷித்வபுர்திருதம் ॥"

என்றவிடத்து, 'உன் அவதாரங்களைக் கண்ட நான், நீ எடுத்த பெண் வடிவத்தையும் காண விரும்புகிறேன்' என அவதாரங்களினுட் இப்பெண் வேஷத்தை வேறுபடுத்திப் பேசியிருப்பதும், ஸ்ரீ பகவான் "கௌதூஹலாய தைத்யாநாம் யோஷித்வேஷோமயாத்ருத:" என்றவிடத்து 'அசுரர்களுக்குக் களிப்பூட்டுவதற்காகப் பெண் வேஷம் என்னால் தரிக்கப்பட்டது' எனத் தானே 'வேஷம்' என்று ஸ்பஷ்டமாய்க் கூறியிருப்பதும், இதற்குத் தக்க சான்றுகளாம்.

"பிறக்கும் பிறவி வெள்ளத்திலே ஒரு பெண்பிறவி பிறந்தானாகில்றே........பெண்பிறந்தார் எய்தும் பெருந் துயரறிவது" என்று ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளைகள் ஸ்ரீஸூக்தியும் இறைவன் பெண்பிறவியே எடுத்திலன் என்பதை வலியுறுத்தும். இவ்விஷயங்கள் ஸ்ரீ அண்ணா அப்பங்கார் ஸ்வாமி அருளிச்செய்தவைகளாகும்.

அஞ்சுவையமுதம் அம்-கண்ணுர்க்கு இனிமை. சுவை-நாவுக்கு இனிமை. அசுரர் போலப் பெண்ணுருவின் அழகில்கூடக் கண் செலுத்தாது தம்லக்ஷ்யமாகிய அமுதத்திலேயே வைத்த கண் வாங்காது நாவில் ஜலமூறத் தேவர்கள் நின்ற நிலை தோற்ற "அஞ்சுவையமுதம்"

என்றார். 'அமிருதம்' என்னும் வடசொல் 'அமுதம்' எனவாயிற்று; சாவாமற் செய்வது என்பது பொருள்.

அன்று-கடல்கடைந்த வந்நாளிலே; கிருதயுகத்திலே. அன்று அளித்தானை இன்று கண்டார் ஆழ்வார்: மயர்வற மதிநலமருளப்பெற்ற அவர்க்கு இறந்தகாலமும் நிகழ் காலம் போல அறிவுக்கு இலக்கானபடி.

கடற்கரையிலே அமுது அளித்தானைக் கேணிக் கரையிலே கண்டேன் என்றாராயிற்று.

இப்பாசுரத்தில், முன்னடிகளால் அநிஷ்ட நிவிருத்தியும், பின்னடிகளால் இஷ்டப்பிராப்தியும் கூறப்பட்டு உள்ளன.

'அஞ்சுவையமுதம் அளித்தானைக் கண்டேன்' என்பதற்கு உட்பொருள்-ஸௌந்தரியத்தாலே கண்ணுக்கு இனியதாயும் துதி செய்வித்தலான் நாவிற்கு இனியதாயும் உள்ள தன் திருமேனியின் போச்யதையைக் காட்டக் கண்டேன் என்பதாம்.

இந்திர னுக்கேன்(று) ஆயர்கள் எடுத்த
எழில்விழவில் பழநடை செய்
மந்திர விதியில் பூசனை பெறாது
மழைபொழிந் திடத்தளர்ந்(து) ஆயர்
எந்தமோ(டு) இனஆ நிரைதள ராமல்
எம்பெரு மான்! அரு(ள்) என்ன
அந்தமில் வரையால் மழைதடுத் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (4)

இந்திரனுக்காகச் செய்யப்படுவது எனநினைத்து இடையர்கள் நடத்திய அழகிய இந்திரவிழாவில் பழைய முறைப்படி செய்யப்படுகிற மந்திரப்படி அநுஷ்டிக்கும் பூஜையைப் பெறாமல், (சினந்து இந்திரன்) மழை பெய்திட,

இடையர்கள் தளர்ந்து, 'எங்களையும் கூட்டமான பசுத்திரளையும் தளராமல், எமது தலைவனே! காப்பாற்றியருள வேண்டும்' என்று வேண்டிக்கொள்ள, அளவில்லாத பெரிய கோவர்த்தனமலையால் அம்மழையைத் தடுத்துக் காப்பாற்றியவனைத் திருவல்லிக்கேணியில் கண்டேன்; (எ-று.)

பகைவனது வில்விழாவை யழித்தமைமுதல் பாசுரத்தில் கூறப்பட்டது. இங்கு இடையரது விழாவைச் சீர்திருத்தினமை கூறப்படுகிறது.

ஆயர்கள் அறிவொன்றுமிலாதவர். இந்திரவிழா, இந்திரனையே நோக்கியது என்று அவர்கள் நினைத்து விட்டனர். எந்த நோன்பும் பரமாத்மாவை நோக்கியது தான் என்பது, அந்தோ! அவர்களுக்குத் தெரியாது. இந்திரவிழாவிலேயே 'இந்திரன்' என்பது பரமாத்மாவையே என்பதை அவர்கள் அறிந்திலர். பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தினளாக அநுகரித்துப் பேசிய ஸ்ரீ ஆண்டாளும் "இந்திரனும் உன்னோடு செல்வத்துக்கு ஏலானே" என்று இந்திரனையே, ஆயர்கள் போலப் பெருஞ்செல்வனாக மதித்துப் பேசியிருப்பது இங்குக் கவனித்தற்கு உரியது. ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளைகள் அதற்கு உரைத்த பொன்மொழிகள் இவை :—

"தான் நினைத்தபோது வருஷிப்பது, அல்லாத போது தவிர்ந்து போருகையாலே ஐசுவரியமுள்ளது இந்திரனுக்கு என்றுயிற்று இவர்கள் இருப்பது, இடைச்சிகள் ஆகையாலே. 'இந்திரனுக்கென்றுயர்கள் எடுத்த எழில் விழவு' என்னக்கடவதிறே."

இவ்வுரையால் "இந்திரனுக்கென்றுயர்கள் எடுத்த" என்பதன் கருத்து நன்கு புலனாகின்றதன்றோ? "இந்திரனுக்கு என்று" என்றது 'இந்திரனுக்கு என

நினைத்து' என்றபடி. இந்திரனுக்கு என்று நினையாது இந்திரனுக்கும் அந்தர்யாமியான பரமாத்மாவுக்கு என்று நினைத்து விழாவை நடத்த முற்பட்டிருப்பின், பூசனை நடைபெறுதபடி தடுத்திருக்கமாட்டான் என்பது குறிப்பு.

திருவாய்ப்பாடியில் ஆயர்கள் ஆண்டுதோறும் மழைக்காக இந்திரவிழா நடத்துவது வழக்கம். கண்ணன் அவதரித்த பின்னரும் அவ்வாறே நடந்து வந்தது. கண்ணனுக்கு அது பிடிக்கவில்லை. நாமிருக்க, புரோடாசத்தை நாய் தின்றாற்போலே ஒரு தேவதை புஜிப்பதா? என்று கண்ணன் அவ்விடையர்களைப் பார்த்து:—"மழைக்காக நீங்கள், இந்திரனுக்கு விழா நடத்தி விருந்து இடுவது வீண். இந்திரனா நம்மை ரக்ஷிக்கிறான்? இந்தக் கோவர்த்தன மலையேயன்றோ நமக்கு இடமும் பசுக்களுக்குப் புல்லுந் தந்து உதவி வருகிறது. ஆகையால், இம்மலைக்கே விருந்திடுங்கள்" என்று உபதேசம் செய்தான். கண்ணன் பேச்சின்படி மலைக்கு விருந்து அளித்தனர் ஆயர். முன் போல விழா நடைபெறவில்லை. மந்திரங்கூறி முறைப்படி தனக்குப் பூஜை நடவாமையால் இந்திரனுக்குச் சீற்றம் உண்டாயிற்று. நெடுநாளாகப் பசித்திருந்த இந்திரனுக்குப் பசிவேளையில் கோபம் உண்டாவது ஸஹஜந்தானே. இடையரையும் பசுக்களையும் அழிக்கக் கல்மழை பொழிந்தான். அப்பொழுது மழையினால் ஆயர் தளர்ந்து கண்ணனிடம் முறையிட்டனர். கண்ணன் முன்கூறிய கோவர்த்தன மலையையே குடையாவெடுத்து ஆயரையும் ஆநிரையையும் மழையினின்றுங் காத்தருளினான். அந்தமில்லாத மலையாகையாலே அப்பெருமழையைத் தடுக்க முடிந்தது. அவ்வாறு காத்த எம்பெருமானைத் திருவல்லிக்கேணியில் கண்டேன் என்கிறார்.

இதனால், நாமறிந்து கொள்வதாவது :—

ஆநிரைக்கு ஆயர்கள் ரக்ஷகர் அல்லர், ஆயருக்கு இந்திரன் ரக்ஷகனல்லன், எல்லோருக்கும் கண்ணனே ரக்ஷகன் என்பதாம். "காக்குமியல்வினன் கண்ண பெருமான்" அன்றோ !

குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன் திருவேங் கடம் சென்று உள்ளான் என்பர் ஸ்வாமி நம்மாழ்வார். மாறன்மறைக்கு ஆறங்கங் கூறும் திருமங்கைமன்னனோ மழைதடுத்தானைத் திருவல்லிக்கேணியில் கண்டதாகக் கூறுகிறார். இக்கூற்று, திருவேங்கடமுடையானே துண் டீரமண்டலத்தரசன் வேண்டுகோளுக்காகக் கண்ணனாய்த் திருவல்லிக்கேணியில் ஸேவை ஸாதிப்பதாகக் கூறும் இவ் வூர்த் தலபுராணத்துக்கு ஒத்துளது.

மழைதடுத்தானைக் கண்டதாகக் கூறும் ஆழ்வாரது உட்கருத்து இது :—

அறியாமையென்னும் மேகங்கள் சூழ்ந்து அறி வொளியை மறைத்துத் துன்பமழை பொழிந்திட, அத னால் தளர்ந்த என்னைக் காப்பாற்ற இறைவன் திரு வல்லிக்கேணியில் வந்துள்ளான் : அவனை நான் கண்டேன் என்பதாம்.

இன்துணைப் பதுமத்(து) அலர்மகள் தனக்கும்
இன்ப(ன்) நல் புவிதனக்(கு) இறைவன்
தன்துணை ஆயர் பாவைநப் பின்னை
தனக்கிறை மற்றையோர்க்(கு) எல்லாம்
வன்துணை பஞ்ச பாண்டவர்க்(கு) ஆகி
வாயுரை தூதுசென்(று) இயங்கும்
என்துணை எந்தை தந்தைதம் மானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (5)

(தனக்கு) இனியதுணையான தாமரையில் பிறந்தருளிய திருமகளுக்கும் இனியனும், நல்ல பூமிதேவிக்குத் தலைவனும், தன்னையே துணையாகக் கொண்ட இடையர் மகளான நப்பின்னைக்கு இறைவனும், மற்றவர்களுக் கெல்லாம் வலிய துணைவனும், பாண்டவர் ஐவர்களுக்காக வாயினாற் சொல்லிவிட்ட வார்த்தைகளைத் தூதுசென்று சொல்லியவனும், எனக்குத் துணைவனானவனும், என் தகப்பன் பாட்டன்மார்களுக்கும் தலைவனுமான ஸர்வேசுவரனைத் திருவல்லிக்கேணியில் கண்டேன் ; (எ-று.)

திருவுக்குந்திருவாகிய செல்வனை இறைவனது "ஆச்ரித பாரதந்த்ரியம்" என்னும் குணத்தில் ஈடுபடுகிறார் இதிலே.

இன்துணை-ஆச்ரயிப்பவர்களுக்கு இனிய துணையாகவுமாம், இறைவனுக்கே இனிய துணையாகவுமாம். தாயாதலின், ஆச்ரயிப்பவர்களுக்கு இனியதுணை என்க. துணையில் இனிமையாவது-ஆச்ரயிப்பவர், 'நமது குற்றத்தைக் கண்டு சீறி, புறக்கணித்து விடுவாளோ' என அஞ்ச வேண்டாதபடி ஸரஸமாய்ப் பழகலாம்படியிருத்தல். இறைவனாகிய துணையினின்றும் அலர்மகளுக்கு உள்ள வேறுபாடு இதனால் நன்கு விளங்கும். இறைவன் தனது ஸ்வாதந்திரியத்தினால், ஒருகால் நம் குற்றம் கண்டு சீறிப்புறக்கணித்து விடவும் கூடும். அலர்மகளோ தனக்கு இயல்பாகிய கருணையாலும், சீற்றமிலாதபெற்றிமையாலும்அங்ஙனம் புறக்கணித்து விடுவதற்கு இடமேயில்லை. ஆகையால் அலர்மகளை "இன்துணை" என்றார்.

இனி, பதுமத்தின் மணமும் மென்மையுமே வடிவு எடுத்தனவோ என்னும்படி தாமரைமலரிலே பிறந்ததனால் உண்டான போக்யதைபற்றி "பதுமத்தலர்மகளை"

இறைவனுக்கு இனியதுணை என்றதாகவும் கொள்ளலாம்.

அலர்மகள் தனச்கும்-உம்மை, உயர்வுசிறப்பு. எல்லோருக்கும் இனியள் அலர்மகள், அவள் தனக்கும் இனியன் இறைவன் என்றபடி.

நற்புவி-நன்மையை உடைய பூமி. புவிக்கு நன்மையாவது-பொறையுடைமை. எல்லாம்வல்ல இறைவனுக்குங் கூட உபாத்திமை வகித்துக் கற்பிக்கலாம்படி மிக்க பொறையுடையள் பூமிப்பிராட்டி என்பர் பெரியோர்.

நீளாதேவியின் அம்சமாக நப்பின்னை அவதரித்தபடியால் நீளாதேவியை நப்பின்னை யென்றே ஆழ்வார்கள் வழங்குவர். "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக் கிடந்த" என்பதற்கு "நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தம்" என்று பட்டர் வியாக்யாநம் செய்தருளினமை காண்க. 'நீளா' என்ற பெயர் கறுத்து அழகிய கூந்தல் உடைமை பற்றி வழங்கியிருக்கலாம். கண்ணன் ஸ்வப்நத்தில் "நீளையே! உன் கூந்தலில் என் மனம் மோஹங் கொள்ளுகிறது" என்று புலம்பியதாக வடமொழி சுலோக மொன்றில் கூறியிருப்பது சவனிக்கத்தக்கது. கூந்தலழகு பற்றியே தமிழிலும் 'பின்னை' என வழங்கினர் போலும்! 'பின்னை' என்பதற்குப் 'பின்அழகு உடையாள்' என்பது பொருள். நப்பின்னையைப்பற்றிக் கூறும்பொழுது நூல்களில் பெரும்பாலும் அவள் கூந்தலழகு வருணிக்கப்படுகிறது. 'நீளா' என்னும் சொல்லும் 'பின்னை' என்னும் சொல்லும் பரியாயமாய் இருத்தலினாலேயே, பரத்வநிலையில் நீளாதேவியைப் பின்னையென்றே ஆழ்வார்கள் வழங்கி வருகின்றனர். ஆயர்மகள் என்று கூடச் சிறப்பிக்கின்றனர். 'குழற்கோவலர் மடப்பாவையும்" என்று நம்மாழ்வாரும், "தன்துணையாயர்பாவை நப்பின்னை"

என்று இப்பாசுரத்திலேயே திருமங்கையாழ்வாரும் அருளியிருப்பது காண்க. இதுபோல பரத்வநிலையில் மஹாலக்ஷ்மியை யாண்டும் சீதை என்றோ ஜாநகி என்றோ குறிப்பிட்டுப் பேசவில்லை. என்ன காரணம்? 'ஸ்ரீ' அல்லது 'திரு' என்னும் சொல்லும் சீதை என்னும் சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கும் பரியாயச் சொற்களல்ல. சீதை என்பது அவதார நிலைமையையே குறிக்கும். "பின்னை" என்பது அங்ஙனன்று, நீளா என்பதன் பரியாயமாதலின். பெயரொற்றுமை கொண்டு உருவத்திலும் வேற்றுமைபாராட்டாது பரமபதத்தில் உள்ள நீளாதேவியையும் "கோவலர் மடப்பாவை" "ஆயர் பாவை நப்பின்னை" எனச் சிறப்பித்து ஆழ்வார்கள் கூறினர் போலும்! நப்பின்னை என்பதில் 'ந' என்பது சிறப்புப்பொருள் தரும் இடைச்சொல்: நக்கீரர் என் புழிப்போல. சிறப்பிடைச்சொல்லின்றி 'பின்னை' என வழங்குவதுமுண்டு: "பின்னை கொல்" "பின்னை தோள் மணந்த பேராயா" என்பன காண்க.

"தன் துணை" என்பதற்குத் தன்னைத்துணையாகக் கொண்டவள் எனவும், தனக்குத் துணையானவள் எனவும் பொருள் கூறலாம்.

ஆயர்பாவை–நப்பின்னை: கும்பர் மகளேயாயினும் ஆயர்கள் எல்லோரும் தமது மகளைப் போலவே அபி மாநிப்பதால் 'ஆயர்பாவை' எனப்பட்டாள். பாவை- உவமையாகுபெயர். பாவை போல எம்பெருமானுக்கு அத்யந்த பரதந்த்ரையாதலின் பாவை யெனப்பட்டாள். நப்பின்னை தன் பாரதந்திரியத்துக்கேற்ப இறையையே தன்துணையாகக் கொண்டாளென்க.

இவ்விடத்தில் எம்பெருமானை அலர்மகள் தனக்கும் இன்பன் என்றும், ஏனையோர்க்கு இறைவன் என்றும்

கூறியது குறிக்கொள்ளத்தக்கது. அலர்மகள், இறை நிலையை மறந்து இன்பநிலையையே உணர்ந்து இறைவனை இன்பனாகவே அநுபவிக்கிறாளென்றும், மற்றவர் இறை நிலையையே உணர்ந்து அநுபவிக்கிறார்களென்றும், இதன் கருத்தைப் பகுத்து அறிக. ஸ்வாமி எம்பெருமானாரும் "ஸ்ரீவல்லப, ஏவம் பூதபூமி நீளா நாயக" என்று கத்யத்தில் 'வல்லபன்' என்றும், 'நாயகன்' என்றும் அவரவர்களுக் கேற்ப வேறுபடுத்திக் கூறியிருப்பதும் இங்கு அறியத் தக்கதாகும். அவ்விடத்திற்கு வியாக்யானம் செய்தருளிய ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளைகள் இக்கருத்தை இவ்வாறு விளக்கிக் கூறுகிறார் :—

"கீழ் ஸ்ரீவல்லப என்றது, இங்கு நாயக என்கிறது. இவர்கள் (பூமிநீளைகள்) பக்கல் முறையாலே பரிமாறு கையும் அவள் (ஸ்ரீ) பக்கல் முறைகெடப் பரிமாறுகையும். இம்முறைக்கேடுதனக்கு இவர்கள் தங்களை எழுதிக் கொடுத்திறே யிருப்பது" என்று.

இவ்வுரைக்குக் கருத்தாவது :— ஸர்வேசுவரனை லக்ஷ்மீ வல்லபன் (இன்பன்) என்றும், பூமிநீளைகளுக்கு நாயகன் என்றும் கூறியிருக்கிறது. அதற்குக் காரணம் பூமிநீளைகளிடம் தான் இறைவன் என்னும் முறை தெரியும் படி எம்பெருமான் பழகுவதும், லக்ஷ்மியிடம் அம்முறை தோற்றாதவாறு காதல்துறையில் மிகவும் இழிந்து லக்ஷ்மியே இறைவி என்று தோற்றும்படி இன்பனாய்ப் பழகுவதுமேயாம் என்பது.

இறைவனும் திருமகளும் ஒரே ஆசனத்தில் எழுந் தருளியிருக்கும்போது, கூடவே பூமிநீளாதேவிகள் நிழல் போல்வனராய்ப் பரதந்திரராய்ச் சேவித்து இருப்பர் என்பது ஸம்பிரதாயம்.

"வைகுண்டேது பரேலோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்தந: |
உபாப்யாம் பூமி நீளாப்யாம் ஸேவித: பரமேச்வர: ||"

என்னும் சுலோகத்தில் பிராட்டியோடு கூடிய இறைவன் பூமிநீளைகளால் ஸேவிக்கப்படுவதாகக் கூறியிருப்பது கொண்டு இது தெளியலாம். "வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி:" என்ற பிரமாணம் பிராட்டியின் பிராதாந்யம் கருதி லக்ஷ்மியோடுகூட வைகுண்டத்தில் எழுந்தருளியிருப்பதாகக் கூறுகிறது. லக்ஷ்மிக்குப் பிராதாந்யமாவது-சேஷித்வம் [தலைமை]. இறைமகனிடமும் திருமகளிடமும் சேர்ந்தே சேஷித்வம் உள்ளது என்பது நூன்முடிபு. இந்தப் பிரமாணத்திலும் "ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி:" என்றது கவனிக்கத்தக்கது. பதி—சேஷி. ஸ்வாமி நம்மாழ்வாரும் "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப" என்று அருளிச்செய்தது இக்கருத்துப் பற்றியே என்க. "இருவருடையவும் அபிமாநததுக்குள்ளே த்ரிபாத்விபூதியாக அடங்கிக்கிடக்கும்" என்பது அவ்விடத்து ஈடு.

இத்தகைய வேறுபாடு தேவிமார்களுக்குள் இருப்பதனாலேயே லக்ஷ்மிதான் புருஷகாரம் (ஆச்ரயித்தவரை இறைவனிடம் சேர்ப்பவள்) என வைணவஸித்தாந்தம் வலியுறுத்துகிறது. இனி, மற்றவர் புருஷகாரமாக எங்கேனும் கூறப்பட்டிருந்தால் அது அவர்களுக்கு இலக்குமியின் ஸம்பந்தத்தாலே வந்ததேயன்றி இயற்கையானதன்று என்று அறிக.

ஆக, புருஷகாரமாகிய பிராட்டியோடும் அவளது ஸம்பந்தத்தால் புருஷகாரமான பூமி நீளைகளோடும் கூடியிருத்தலால் கருணைமிக்க இறைவன் மற்ற எல்லா சேதநருக்கும் துணைவனாயினன் என்கிறார், "மற்றையோர்க்கெல்லாம் வன்துணை" என்று. வன்துணையாயிருத்தலா

வது, தன்னைப் பேணுது அடியார்கள் துன்பத்தைத் தான் ஏற்று நிற்றல். "வன்துணை வானவர்க்காய்" என்றவிடத்தில் இவ்விதமே ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளைகள் வியாக்யாநம் செய்துள்ளனர். "தேவர்களுக்காகத் தன்னைப் பேணுதே அம்புக்கு இலக்காக்குகை வன்துணையாவது" என்பது அவ்வியாக்யாநம்.

வன்துணையானமைக்கு ஓர் உதாரணம் காட்டுகிருர் "பஞ்சபாண்டவர்க்காகி" என்று. பாண்டவர்-பாண்டுவின் புதல்வர். பஞ்சபாண்டவர்—வடசொற்ருடர். "கிருஷ்ணாச்ரயா: கிருஷ்ணபலா: கிருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்றபடி கண்ணனை யண்டி அவனையே துணையாகக் கொண்டவர் பாண்டவர் என்க. பஞ்சபாண்டவர்க்குத் தூது ஆகி எனக்கூட்டுக. 'பஞ்சபாண்டவர்க்காக' என்று பாடம் இருந்திருக்கலாமோ என்று தோற்றுகிறது, இவ்விடத்து வியாக்யாநங்களைக் கவனிக்கும்பொழுது. "பின்னோர் தூதாதி மன்னர்க்காகி" என்பதைப் பார்த்து, இங்கும் 'ஆகி' என்று பாடம் வழங்கியிருக்கலாம் போலும்! பாண்டவர்கள் என்ன சொல்லி அனுப்பினுர்களோ அதையே துரியோதனனிடம் சொல்ல வேண்டிய தூதன் ஆயினுன். ஸர்வஸ்வதந்திரனுக்குத் தன்கருத்தை வெளியிடச் சுதந்திரமில்லை! என்னே அடியார்க்கு இறைவன் ஆட்பட்ட நிலை! என்ற வியப்பும் ஈடுபாடும் "வாயுரை தூது" என்றவிடத்து மிக இனிமையாக விளங்குகின்றன.

திருமகள் முதலியோரும் கூசிப்பிடிக்கும் மெல்லடி சிவக்கப் படர்ந்தாரணம் முழங்க நடந்த அருமையை நினைத்துச் "சென்று" என்கிருர்.

இப்படி ஆச்ரிதர் விஷயத்திலே தன் மேன்மை பாராது தாழ நிற்கும் நிலையால் தான் தெரிந்துகொண்டதைக்கூறுகிருர், "என்துணை" என்று.

110933

எந்தை தந்தைதம்மான்-தன் வம்சத்திற்கே நாதன் என்றபடி.

ஸ்ரீ பூமிநீளா நாயகன் ஆச்ரித பரதந்த்ரனாய்த் தூது நடந்தனனே : இஃது என்ன எளிமையோ என்று தானும் தன்வம்சமும் ஈடுபட்டு அவனையே துணையாகப்பற்றி னதைக் கூறினார் இப்பாசுரத்தில்.

அந்தகன் சிறுவன் அரசர்தம் அரசற்(கு)
இளையவ(ன்) அணியிழை யைச்சென்று
எந்தமக்(கு) உரிமை செய்யெனத் தரியா(து)
எம்பெரு மான் ! அரு(ள்) என்ன
சந்தமல் குழலா(ள்) அலக்க(ண்) நூற்றுவர்
தம்பெண்டிரு(ம்) எய்திநூ(ல்) இழப்ப
இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (6)

குருடன் (திருதராட்டிரன்) மகனும் ராஜாதிராஜன் (துரியோதனன்) தம்பியுமான துச்சாஸநன், அணிந்த ஆபரணங்களை உடையளான திரௌபதியை அடைந்து, 'எங்களுக்கு நீ அடிமைசெய்' என்று சொல்ல, (அவள் அச்சொல்லைத்) தாங்சமாட்டாது 'எம்பெருமானே! காப் பாற்று' என்று அரற்ற, இருண்ட நிறங்கொண்ட கூந்தலை உடையளான திரௌபதியின் துன்பத்தைத் துரியோ தனாதியர் நூற்றுவர்களுடைய மனைவியர் எல்லோரும் அடைந்து கழுத்து மங்கல நாணை இழக்கும்படியாக இந்திரன் மகனாகிய அர்ஜுனனது தேரின் முன்னே நின்ற பார்த்தஸாரதியைத் திருவல்லிக்கேணியிலே கண்டேன்; (எ-று.)

கண்ணன் பாண்டவதூதன் ஆனதும், பார்த்தசாரதி யானதும் திரௌபதிக்காக என்கிறார் இந்தப் பாட்டில்.

பாண்டவர், துரியோதனாதியர் சூழ்ச்சியில் அகப் பட்டுத் தம்மனைவி திரௌபதியையுங்கூடப் பொய்ச் சூதில் தோற்றனர். துச்சாசனன் திரௌபதியிடம் சென்று, "நீ எங்களுக்கு உரியவளாகிவிட்டாய் ஆதலின், எமக்கு அடிமை செய்க" என்று தகாத வார்த்தைகள் கூறினான். தன் தாய் போன்றவளல்லவா என்ற விவேக மில்லை குருடன் மகன்தானே: அறிவுகேடு பரம்பரை யாய் வருகிறது. உள்ளும் புறமும் குருடன் திருதராட் டிரன். அவன் மகன் புறக்கண் உடையவனாயினும், அகக் கண் இலாமையின் தந்தையை ஒத்தான். அகக்கண்ணாவது விவேகம். அப்பா பார்த்துக் கண்டிக்கப் போகிறாரே என்கிற பயமிருந்தால் பிள்ளைகள் தீயவழியில் செல்ல முடியாது. துச்சாசனனோ அப்பா பார்த்தால்தானே கண்டிக்கப்போகிறார் என்று பயமின்றி இஷ்டம்போல் கண்டபடி திரிந்தவன். ஆதலின், விவேகமின்றி நடந்து கொண்டான் என்ற கருத்து "அந்தகன் சிறுவன்" என்னு மிடத்தில் தோற்றி இன்பம் பயக்கிறது. இவ்வினிய கருத்தை ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளைகள் உளமகிழ விளக்கும் அழகுகாண்க :—

"பிதாவானவன் கண்ணஞ்ச வளர்க்க வளருகை யன்றிக்கே தான்கண்டபடி மூலையடியே திரிந்தவன்"

அரசர்தம் அரசன்-துரியோதனன் : அவற்கு இளைய வன். தகப்பனைப் போலத் தமையனும், நல்வழிப்படுத் தானாய்ச் செல்வச் செருக்கினாலே தீயவழியிலேயே தூண்டுவானாயினான். வேறு என்ன வேண்டும் துச்சா சனன் கெடுவதற்கு! அவிவேகம் அந்தகன் சிறுவனா தலின் ; செல்வச்செழிப்பு ராஜாதிராஜன் தம்பியாதலின் ;

ப்ரபுத்வம் யுவராஜன் ஆதலின்; யௌவனம் இளையவனாதலின். இந்நான்கும் சேர்ந்தால் அவன் கெடுவதற்குக் கேட்பானேன்?

"யௌவநம் தநஸம்பத்தி: ப்ரபுத்வம் அவிவேகிதா।
ஏகைகமப்யநர்த்தாய கிமுயத்ர சதுஷ்டயம்" ॥

என்ற சுலோகத்தில் கூறிய நான்கும் துச்சாஸனனிடம் பொருந்தினமை தோற்ற "அந்தகன் சிறுவன் அரசர்தம் அரசற்கிளையவன்" என அருளிய அழகு அதிசயிக்கத் தக்கதாயிருக்கிறது.

அணியிழை-அன்மொழித்தொகை. துரியோதனன் வீட்டுவிழாவிற்கு வந்தவளாகையால் திரௌபதி ஏராளமான ஆபரணங்கள் அணிந்திருந்தாள் என்பது தோற்ற 'அணியிழை' என்கிறார்.

ஒற்றைப் புடைவையுடன் விலக்கமாயிருப்பதைக் கூட லக்ஷயம் செய்யாது, துச்சாஸநன் சபையினின்றும் திரௌபதியிடம் கூசாது போன துணிவை வாய்விட்டுப் பேசமாட்டாமல் ஆழ்வார் "அணியிழையைச் சென்று" என்கிறார்.

அணியிழையைச் சென்று துச்சாஸநன் தலைமயிரைப் பற்றியிழுத்துச் சபைநடுவே கொணர்ந்து நிறுத்தித் துன்புறுத்திய செய்திகளை வாய்விட்டுக் கூறமாட்டாது "உரிமை செய்" என்று அவமானப்படுத்தியதை மாத்திரம் ஆழ்வார் அருளியது இரங்கி உருகிக் குழைந்த அவரது திருவுள்ளத்தின் மென்மையைப் புலப்படுத்துகிறது. அவன் செய்த கொடுமைகள் கூறாது விடப்பட்டாலும் "சென்று" "செய்யெனத்தரியாது" என்ற சொற்கள் கிடக்கும் கிடையிலே, ப்ரஸித்தமான

அக்கொடுமைகளை நம்நெஞ்சில் தோற்றச்செய்வது போற்றற்குரியது.

எந்தமக்கு உரிமை செய்யெனத் தரியாது-பிறர்க்கு உரிமையென்ற பேச்சே ஸஹிக்க முடியாததாயிற்று திரௌபதிக்கு: மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லாத ஸ்ரீ ஆண்டாள் போல.

வீரர்களாகிய கணவர் பக்கத்திலிருக்கத் தொலைவில் உள்ள கண்ணனை, "எம்பெருமான்! அருள்" என்றாள். "மஹத்தான ஆபத்துவந்தபோது பகவானாகிய ஹரியை ஸ்மரிக்கவேண்டும்" என்று பெரியோர்கூறக் கேட்டு வைத்தாள் போலும் என்பர் எம்பார். இதையே பட்டர் அருளிச்செய்யும் பொழுது, "மனைவி, கணவன் கைப் பிடித்துப் போகா நின்றாலும், இடறினால் 'அம்மா' என்பது போலத் திரௌபதியும் கணவர்பக்கத்தில் இருந்தாலும் தாயாயளிக்கின்ற தண்டாமரைக் கண்ணனையே கூப்பிட்டாள்" என்று ரஸமாகப் பணிப் பராம்.

சந்தம் அல்குழலாள்—சந்தம்-நிறம். அல்-கருமை. அல்சந்தக்குழலாள் எனக்கூட்டுக: கருநிறக் கூந்தலாள் என்பது பொருள். திரௌபதி தலைவிரிகோலமாய்த் துன்புற்றச்சபதம்செய்த நிலையை நினைப்பூட்ட இங்ஙனம் அவளை விசேடித்தார் போலும்! "சந்தமர்க் குழலாள்" என்பதும் பாடம். சந்து-வாசனை.

அலக்கண்-துன்பம். திரௌபதி பட்ட துன்பத்தைத் துரியோதனாதியர் நூற்றுவர் மனைவியரும் பட்டனர். ஐவரின் ஒருமனைவி பட்ட துன்பத்தை நூற்றுவரின் பல மனைவியரும் பட்டனர். "பாண்டவர்தம்முடைய பாஞ் சாலி மறுக்கமெல்லாம், ஆண்டங்கு நூற்றுவர்தம்

பெண்டிர்மேல் வைத்தவப்பன்" என்றார் பெரியாழ்வாரும். திரௌபதியடைந்த துன்பத்துக்கு மேலே நூலையும் இழந்தனர் நூற்றுவர்தம் பெண்டிர். நூல்-திருமங்கலசூத்திரம். நூற்றுவர்-'ஐவர்' என்பது பாண்டவரைக் குறிப்பது போல, இது துரியோதனாதியரைக் குறிக்கும்; தொகைக் குறிப்பு.

இந்திரன் சிறுவன்-அர்ஜுநன். குந்திக்கு மந்திர மஹிமையால் இந்திரன் அநுக்ரஹித்த மகனாதலின் அர்ஜுநன் 'இந்திரன் சிறுவ'னாயினான். இந்திரன் மூவுலகையும் காப்பவனாயினும், தன் சிறுவனை யுத்தத்தில் காத்திலன் என்னும் கருத்துப்பட "இந்திரன் சிறுவன்" என்றார். 'சிறுவன்' என்னும் சொல் காக்கப்படவேண்டிய உரிமையைக் காட்டுகிறது.

இப்பாட்டில் "தரியாது" என்னும் சொல்லினாற்றலானும், "சந்தமல் குழலாள்" என்னும் சொல்லினாற்றலானும், கூறாமல் கதையைத் தோற்றச் செய்வது மிகவும் போற்றற்பாலது.

கைக்கொண்ட கணவரும் நம்மைக் காவார், பெற்றெடுத்த தந்தையும் நம்மைக் காவார், எம்பெருமானே நம்மைக்காப்பான் என்பது திரௌபதி அர்ஜுநன் இவர்களது வரலாற்றிலிருந்து நாமறியும் பாடம்.

பரதனும் தம்பி சத்துருக் கனனு(ம்)
இலக்கும ணேடுமை திலியும்
இரவு(ம்)நன் பகலும் துதிசெய்ய நின்ற
இராவணாந் தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர்பொழில் ஊடு
குயிலொடு மயில்கள்நின்(று) ஆல
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்(து) அறியாத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (7)

பரதனும், (அவன்) தம்பி சத்துருக்நனும், லக்ஷ்மணனோடு சீதையும் இரவும் பகலுமாக இடைவிடாது துதிக்கும்படியிருக்கின்ற, இராவணவதம் செய்த (இராமனாகிய) எமது ஸ்வாமியை, குரவ மலர்கள் மணம் வீசுகிற குளிர்ந்த சோலையிலே கூவும் குயில்களோடு மயில்கள் விடாது ஆட, கதிரவன் ஒளிகள் உள்ளே நுழைந்திடாத திருவல்லிக்கேணியிலே கண்டேன்; (எ—று.)

இராகவன் இராவணனைக் கொன்ற சேவகத்தைத் தம்பியரும் சீதையும் இடைவிடாமல் துதிக்கின்றார்களாம். அவர்களால் இம்மஹத்தான வீரசரித்திரத்தைத் தனித்துப் பாடிமுடிக்க இயலவில்லையாம். ஏற்கெனவே இதுவரை சேர்ந்தேயிருந்த பரதனும் சத்ருக்நனும் இங்கும் சேர்ந்து கொள்ளுகிறார்கள். "சீதையும் நானும் உம்மைப் பிரியில் தரியோம்" என்று பிரிவாற்றாமையில் சீதையோடு உடனின்ற லக்ஷ்மணன், இங்கும் சீதையோடு உடனின்றே காண்கின்றான் துதிசெய்வதிலும். இரவும் பகலுமாய் விடாது துதிக்கின்றனர். இராவண ஸம்ஹாரத்தை நேரில் கண்ட லக்ஷ்மணனும், கேள்விப்பட்ட பரதனும் இராவண ஸம்ஹாரத்தைத்தான் துதிக்கிறார்கள். யாவரையும் எக்காலத்தும் பரவசமாக்குவது இராமனது வீரசரித்திரம்.

அவர்களது துதியைக் கேட்டுக்கொண்டு திருவல்லிக்கேணியிலே ஆநந்தமாய் எழுந்தருளியிருக்கிறானும் சக்ரவர்த்தித் திருமகன். அப்பொழுது குரவமலர்கள் மலர்ந்து எங்கும் ஒரே மணங்கமழுகின்றன. பரதாதியர் பாட்டைப் பின்பற்றிக் கற்பவை போலக் குயில்களும் இராவணவதத்தைக் குறித்துப்பாடி இராவணாந்தகனை மகிழ்விக்கின்றன. பரதாதியர் இவ்விருவராய்ச் சேர்ந்து கொண்டதுபோலக் குயிலும் மயிலும் சேர்ந்துகொண்டு விட்டன. குயிலின் பாட்டிற்கு ஏற்ப மயில்கள் ஆடல் நிகழ்த்தின. பரதாதி

யருக்கும் குயிலாதிகளுக்கும் ஆநந்தத்துக்கு அளவே யில்லை. இரவும் பகலும் ஒரே ஆடல் பாடலாயிருக்கிறது. பகல் இரவு என்பது அங்குத் தெரியவேயில்லை: வெயில் அங்கு நுழைந்தால்தானே பகல் இரவு தெரியும்? வெயி லுக்கு அந்தப் பொழில் எப்படி இருக்கும் என்பதுகூடத் தெரியாதாம். வெயில்கூட நுழையமுடியாதபடி சோலை யிலே அவ்வளவு செறிவு! சிரமமில்லாமல், பரதாதியர் துதிசெய்யநின்ற காட்சியை இங்ஙனம் கண்டு களிக்கிறார் ஆழ்வார். தனக்கும் அவர்களோடு கலந்துபாட ஆசை உண்டாகிவிடுகிறது. அதன் விளைவுதான் நாம் அநுபவிக் கும் பாடல். இக்குளிர் பொழிலின் வளம்தான் பரதன் முதலிய நித்யசூரிகளையும், குயில் முதலிய பறவையினங் களையும், மதிநலம்பெற்ற ஆழ்வாரையும் பாடச் செய்கிறது போலும்! "முக்கோட்டை போலே காணும் சோலையிருப்பது" என்று (3-6-11) ஈட்டில் அருளி யிருப்பதுங் காண்க. முக்கோட்டை-கவி தோற்று விக்கும் இடம்.

இங்ஙனம் தாம் கண்டபடியைச் சித்திரித்து அப்ப டியே காட்டிய ஆழ்வாருக்கு யாம் என்ன கைம்மாறு செய்ய வல்லோம்?

குரவம் கமழ்தலால் நாசிக்கும், குளிர்ச்சியால் உட லுக்கும், குயில் கூவுதலால் செவிக்கும், மயில் ஆலுதலால் கண்ணுக்கும், துதிப்பித்தலால் நாவிற்குமாக ஐம்பொறி களுக்கும் திருவல்லிக்கேணியில் பொழில் இன்பந்தந்து நிற்றல் காண்க.

நித்யசூரிகளாகிய பரதன் முதலியோர் விடாது துதி செய்வதாகக் கூறப்படுவதால், எம்பெருமானது வரம்பில் குணமுடைமை புலனும்.

இராவணாந்தகன்—இராவண + அந்தகன் : வடசொற்றொடர். இராவணனுக்கு யமன் என்பது பொருள்.

பரதாதியரைப்போல வீரராகிய ஆழ்வார் அவ்வீரத்துறையில் தாமும் தோற்றமை தோற்ற "எம்மானை" என்றார்.

முடிதுறந்த ராமனைக் கண்டதாக முதற் பாசுரத்தில் கூறிய ஆழ்வார் முடிபுனைந்தானைக் கண்டதாக இங்குக் கூறி, இராமாயணத்தைப் பட்டாபிஷேகத்தோடு முடிக்கும் சமத்காரம் காண்க. வநப்ரவேசந் தொடங்கி இராவண ஸம்ஹாரம் இறுதியாகவுள்ள பாகமே இராமாயணமாகும் ; மற்றவை முன்னுரையும் பின்னுரையுமாமென்க.

கதிரவன் கதிர்கள் திருவல்லிக்கேணியில் நுழைவதில்லையாம். இறைனுக்கு அஞ்சி இரவி உதித்து ஒளி பரப்புவது இவ்வூரைத் தவிர்த்துப்போலும்! "ஈசுவராக்ஞை நடையாடாத தேசமாயிற்று" என்பர் ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளைகள். இறைவனது ஸ்வாதந்திரிய வெப்பம் தாக்காது, அவனது கருணையால் குளிர்ந்த தேசம் என்பது இதன் உள்ளுறை பொருள். இனி "இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியா" என்பதைப் பொழிலோடு கூட்டிப் பொருள் கொள்ளவுமாம்.

குரவமே, ஏ—அசை.

குளிர்பொழில்-வினைத்தொகை. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையுமாம்.

இரவும் நன்பகலும்-நன்மையை இரவோடும் கூட்டுக. நல்லிரவு என்க. துதிக்கு உபயோகப்படுதலின் அவை நல்லவையாயின.

பள்ளியி(ல்) ஓதி வந்ததன் சிறுவன்
வாயிலோர்(ர்) ஆயிர நாமம்
ஒள்ளிய ஆகிப் போதஆங்(கு) அதனுக்(கு)
ஒன்றுமோர் பொறுப்பில(ன்) ஆகிப்
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்பப்
பிறைஎயிற்(று) அனல்விழி பேழ்வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (8)

பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு (த்திரும்பி) வந்த தன் சிறுமகன் (பிரகலாதன்) வாயிலே ஓர் ஆயிரம் (இறைவனது) திருநாமங்கள் அழகுடையனவாய் வர (சொல்லப்பட) அப்பொழுது அவ்விஷயத்தில் ஒருவிதத்திலும் பொறுமையில்லாதவனுகி (இரணியன் தன்) மகனைக் கோபித்து ஆவேசத்தோடே தூணைத்தட்ட, பிறை போன்ற பற்களும், தணல்போன்ற கண்களும், பெரிய வாயும் உடைய தெளிந்த (நர) சிங்கமாய் அவதரித்த தேவனைத் திருவல்லிக்கேணியிலே கண்டேன்; (எ-று.)

குழலினும் யாழினும் தம் மக்கள் மழலைச்சொல் இனிது என்பர். தினப்படி பள்ளிக்கூடத்தில் நடந்த பாடங்களைக் குழந்தைகள் மழலை மொழியிலே அள்ளிக் கொட்டும்போது உண்டாகும் ஆநந்தம் அநுபவித்த பெற்றோரே அறிவர். பிரகலாதன் பள்ளியிலிருந்து வந்தான். தன்குழந்தை மழலை மொழியில் "ஹிரண்யாய நமஃ" என்று படித்ததைச் சொல்லப் போவதைக் கேட்க மிக்க குதூகலம் இரணியனுக்கு. தன்மகன் வாயாலே தன் பெயரை மழலையில் குழறுவதை இரணியன் ஆசையுடன் எதிர்பார்த்திருந்தான். ஆனல், அது எதிரியின் பெயராயிருந்தது. "ஹிரண்யாய நமஃ" என்பதற்குப் பதிலாக

"நாராயணாய நம:" என்றான் குழந்தை பிரகலாதன். தன்பருவத்தை விஞ்சி இப்பெரிய திருநாமத்தைச் சொன்னது ஆயிரநாமங்களையும் சொல்லியது போலத் தோற்றிற்று. குழந்தை பேச்சாகையாலே அழகாயிருந்தாலும், எதிரியின் பெயராதலால் ஸஹிக்கமுடியவில்லை ஹிரணியனுக்கு. சீறிவிழுந்தான். ஒருவிதத்தாலும் ஸஹிக்கமுடியவில்லை; பள்ளியிலோதும் பருவம் என்று பார்த்தானில்லை; தன் சிறுவன் என்று நினைத்தானில்லை. அழகிய இனிய மழலையென்று மதித்தானில்லை; தான் பெற்ற பிள்ளையையே வெறுத்துத் தள்ளினான். அவ்வளவு கோபம்! கோபாவேசத்தாலே பக்கத்தில் உள்ள தூணை அவன் தட்டினான். உடனே பிறைபோன்ற பற்களும் அனல் போன்ற விழிகளும் பெரியவாயுமாய்ச் சிங்கவுருவில் அத்தூணில் தோற்றினான் தேவன். முரட்டு இரணியனைக்கண்டும் கலங்காது அச்சிங்கம் தெளிந்திருந்தது. தேவன் மனிதப்பிறவியினுங் கீழ்ப்பட்ட சிங்கப்பிறவியெடுத்து இரணியனைக் கொன்று, பிரகலாதனைக் காப்பாற்றினான். தந்தையும் பகைத்தால் அவனினும் நெருங்கிய உறவாளனாய் இறைவனே காப்பான் என்க.

திருநாமஸங்கிர்த்தனம் செய்ததற்காகத் தன் பிள்ளையை இரணியன் வெறுத்துக் கைவிட்டான். அதே காரணத்திற்காக அவனது உறவை விரும்பிப் பிரகலாதனைத் தன் பிள்ளையாகப் பாவித்துப் "பிள்ளையைச் சீறி" என்றார் ஆழ்வார்.

ஒள்ளியவாகி-அழகு உடையனவாகி. ஒண்மை-அழகு. ஒன்றுமோர் பொறுப்பிலனாகி-ஓர் ஒன்றும் பொறுப்பிலனாகி என்க: ஒருவிதத்திலும் பொறாமையிலாதவனாகி என்றபடி. தெள்ளிய சிங்கம்-இரணியனுக்குச் சீற்றத்தோடு தோற்றினாலும், பக்தன் பிரகலாதனுக்குத்

தெளிந்து அருள்சுரத்தலின் 'தெள்ளிய சிங்கம்' என்றூராகவுமாம். "சிற்றத்தோ டருள்பெற்றவன்" என்றதுங்காண்க.

சிறி வெகுண்டு-மிகச்சினந்து என்றபடி; ஒருபொருட் பன்மொழி.

மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையி னேடுசென்(று) இழிந்த
கானமர் வேழம் கைஎடுத்து அலறக்
கராஅதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து
சென்று நின்(று) ஆழிதொட் டானைத்
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. (9)

மீன்கள் பொருந்திய ஒரு பொய்கையிலே அன்று பூத்தமலர் பறிப்பதற்காக அவாவோடுபோய் இறங்கிய காட்டில் வாழும் யானை (தன்) துதிக்கையை உயரத் தூக்கிப் பிளிறும்படியாக முதலை அந்த யானையின் காலைக் கௌவிக்கொள்ள, யானையின் துன்பம் நீங்கும்படி பறவை (கருடன்) மீதேறிச் சென்று (பொய்கைக் கரையிலே) நின்று சக்ராயுதத்தை (முதலையைக் கொல்வதற்காக) விடுத்தவனை, வண்டுகள் அமர்ந்த சோலையையும், மாடங்களையும் உடைத்தான பெரிய மயிலாப்பூரையடுத்த திருவல்லிக்கேணியிலே கண்டேன்; (எ-று.)

கஜேந்திராழ்வானுக்குக் கருடன்மீது வந்து அருளியவனைக் கண்டதாகக் கூறுகிறார் இப்பாட்டில்.

கஜேந்திரனுக்குப் பூப்பறித்துப் பெருமானுக்குச் சாத்த நெடுநாளாக ஆசை. அது, ஒரு பொய்கையைக் கண்டது. புதுமலர்கள் அங்குப் பூத்திருந்தன. ஆசை

யோடு பொய்கைக்குள் பூக்கொய்ய அது இறங்கிவிட்டது. முதலை முதலிய துஷ்டஜந்துக்கள் அங்கேயிருக்கும் என்று அது நினைக்கவேயில்லை. மீன்கள்தாம் உள்ளனவென்று அதன் மதிப்பு. அதனால்தான் பொய்கைக்குள் இறங்கிற்று. இறங்கவும், யானையின்காலை முதலையொன்று கௌவிக்கொண்டது. யானை பலம்பொருந்தியதாயினும் முதலையினால் இழுப்புண்டு மிக்கதுயருற்றது. வேற்றிடத்தில் யானையும் பூனையாமன்றோ? காட்டில் தன்னிஷ்டப் படி திரிந்துகொண்டிருந்தது, நீரிலே துயரடைந்துவிட்டது. முதலைக்குத் தன் நிலமன்றோ நீர்? ஆகையால் அது யானையை நீருக்குள்ளே இழுத்துக்கொண்டே போய் விட்டது. "நெடும்புனலுள் வெல்லும் முதலை யடும் புனலின், நீங்கி னதனைப் பிற" என்ற குறளும், "காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா, வேலாள் முகத்த களிறு" என்ற குறளும் கண்டு அறிந்து இன்புறற்பாலன. முழுகுகிற யானை, பூக்கொய்த கையை உயரத்தூக்கிக் கொண்டு கதறிற்று. பறித்த புஷ்பத்தை அப்படியே எம்பெருமான் திருவடிகளில் சேர்த்துவிடவேண்டும் என்பது அதன் அவா. அவ்வாறு முடியவில்லையே என்பதுதான் யானையின் துயரம். தான் இறந்து போவது பற்றிச் சிறிதும் அது வருந்தவில்லை.

யானையின் துயரத்தைத் தீர்க்க அதன் அலறலைக் கேட்ட இறைவன் ஓடும் புள்ளேறி விரைந்தான். கருடன் வேகமும் மந்தமாய்த் தோற்றிற்றாம் இறைவனுக்கு. சண்டிமாடுகளை ஓட்டுவது போலக் கருடனையும் காலால் உதைத்து ஓட்டிக்கொண்டே வந்தானாம் இறைவன். ('புள் மீது சென்று' என்னாது 'புள்ளூர்ந்து சென்று' என்ற தன் ரஸமான பாவமிது. ஊர்ந்து—நடத்தி). பொய்கைக் கரைவரையிலும் இங்ஙனம் வேகத்துடனேயே சென்று

அங்கே திடீர் என நின்றனன். ("புள்ளூர்ந்து சென்று நின்று" என்பதில் அவன் வந்த வேகத்திலும் திடீர் என நின்றதில் ஆச்சரியபாவம் அருமையாய்த் தோற்றுகிறது). நின்று சக்ராயுதத்தை விடுத்து முதலையைக்கொன்று யானையை விடுவித்து அதன் அவாவை நிறைவேற்றிக் காப்பாற்றினன்.

யானைக்கு உதவ அதிவேகமாய் வந்த களைப்புத்திர, வண்டுகள் மொய்க்கும் சோலையை உடைய திருவல்லிக் கேணியிலே அவ்விறைவன் எழுந்தருளியிருக்கிறன்: அவனைக்கண்டேன் என்கிறர்.

இந்திரத்யும்நன் என்னும் அரசன் பூஜை செய்து கொண்டிருக்கும்போது வந்த அகஸ்தியமுனிவர், அவன் தம்மை உபசரியாது அலக்ஷ்யம் செய்ததாகநினைத்து "யானையாகக்கடவை" எனச்சபித்ததால் அவ்வரசன் கஜேந்திரனுயினன் என்றும், ஜலத்தில் தவஞ்செய்து. கொண்டிருந்த தமது காலைப்பிடித்து இழுத்ததனல் சினங் கொண்ட தேவலகன் என்னும் முனிவரது சாபத்தினல் ஹூஹூ என்னும் கந்தருவன் முதலையாயினன் என் றும் புராணங்கூறும்.

'மீனமர்' என்றதனல் நீர்வற்றுத கயம் என்ற தாயிற்று.

'கானமர்' என்றதற்கு மணம் பொருந்திய என்றும் பொருள் கூறலாம். பூமாலை தொடுப்பவர் போல நாண் மலர் கொய்யும் யானையும் மணம் பொருந்தியதாயிற்று. மத கந்தத்தைச் சொல்லவுமாம். அப்பொழுது மத்தகஜம் என்றபடி. கரா-முதலை.

துயரத்தின் மிகுதிகூறுவார் "ஆனையின் துயரம்" என்றார்.

தொடுகையையன்றி விடுகையை அறியவொண்ணாத விரைவு தோற்ற 'ஆழிதொட்டானை' என்றார்.

பொய்கைக் கரையில் துயர் தீர்த்தவனைக் கண்டதாகக் கூறியதன் உட்கருத்து:—

ஐம்புலன்களாகிற பல முதலைவாய்ப்பட்டு அல்லலுற்ற எனது நெடுந்துயரைப் போக்க அல்லிப்பொய்கைக் கரையிலே எழுந்தருளியுள்ள அவனை நான் கண்டேன் என்பதாம்.

மன்னு தண் பொழிலும் வாவியு மதிளும்
மாடமா ளிகையுமண் டபமும்
தென்னன் தொண்டையர்கோன் செய்தநன் மயிலைத்
திருவல்லிக் கேணிநின் றானை
கன்னி நன்மாட மங்கையர் தலைவன்
காமரு சீர்க்கலி கன்றி
சொன்ன சொல்மாலை பத்துடன் வல்லார்
சுகமினி தாள்வர்வா னுலகே. (10)

பொருந்திய குளிர்ந்த சோலைகளும், குளங்களும், மதில்களும், மாடங்களும், மாளிகைகளும் மண்டபங்களுமாகப் பாண்டிய நாட்டையுடைய தொண்டை நாட்டுத் தலைவனாலே செய்யப்பட்ட நல்ல மயிலையை அடுத்த திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருப்பவனைப் பற்றி, அழியாத நல்ல மாடங்களை உடைய மங்கை நகருக்கு அரசராகிய விரும்பத்தக்க சிறப்பையுடைய திருமங்கையாழ்வார் அருளிச்செய்த சொல்லினால் தொடுக்கப்பட்ட மாலைபோன்ற இப்பதிகத்தைப்

பொருளுடன் கற்பவர், பரமபதத்தை மிகவும் இன்பமாக ஆள்வர் ; (எ-று.)

தெய்விகப்பாடலாகிய இப்பதிகத்தைக்கற்பாருக்குப் பலன் சொல்லுகிறது இப்பாசுரம்.

தொண்டையர்கோன் தாராள மனத்துடன் ஏராள மாகச் செய்த பணிகளைத் தம் வாயாரப்பேசி மகிழுகிறார் முன்னிரண்டடிகளிலே.

தலவரலாற்றில் கூறியவாறு, தன்வேண்டுகோளின்படி கோயில் கொண்ட திருவேங்கடமுடையானுக்கு உவப்பாகப் பல திருப்பணிகள் புரிந்தனன் தொண்டைமான் சக்ரவர்த்தி. அவற்றைப் பாராட்டுகிறார் ஆழ்வார்.

திருநாங்கூர்ச் செல்வ வளத்தை நேரில்கண்டு களிப்பது மாத்திரம் போதாது; ஏட்டிலே எழுதிப் பார்க்க வேண்டும் என்கிறார் இவ்வாழ்வார்.

"ஏடேறு பெருஞ்செல்வத் தெழில்மறையோர்
நாங்கைதனுள்"

என்றது காண்க. இதனால், இவ்வாழ்வாருக்குத் தாம் கண்ட சிறப்புக்களைத் தம் நாவில்புகுத்திப் பேசவேண்டும் என்ற ஆர்வமுடைமை தெரிகிறதன்றோ? அவ்வண்ணமே, தமது அருளிச்செயலிலே பல இடங்களிலே இவர் பேசியிருப்பதை நாம் பார்க்கிறோம். இங்கும் தொண்டையர் கோன் செய்த திருப்பணி வளத்தைக்கூறி உளமகிழுகிறார் ஆழ்வார்.

இத்தொண்டையர்கோனிடம் ஆழ்வாருக்குள்ள மதிப்பு மதிப்பிடற்கு அரிது. "மன்னவன் தொண்டையர் கோன்வணங்கும் நீண்முடிமாலை" என்றும் "துளங்கு நீண்முடியரசர்தம் குரிசில் தொண்டை மன்னவன்

திண்டிறல் ஒருவற்கு" என்றும் பல இடங்களில் இவர் அருளியுள்ளமை காண்க. தொண்டைமன்னவன் திண்டிறலும், சொண்ட பக்திமையும் கண்ட திருமங்கைமன்னன் அவனைக் காமுறுகிருர். கற்ருரைக்கற்ருரே காமுறுவர் அன்ருே?

அம்மன்னனையே திருமங்கைமன்னன் "வயிரமேகன்" என்று குறிப்பதாக ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளைகள் வியாக்யாநம் செய்துள்ளார்.

இத்தொண்டைமானைப் பல்லவர்மரபில் பிறந்தவன் என்று நம்பூர்வர்கள் நினைத்ததாகக் கருதுவதற்கு இடம் இருக்கிறது. சித்திரகூடப்பதிகத்திலே, பல்லவர்கோன் ஒருவன், பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து பணிந்ததாகக் குறிப்பிடுகிருர் ஆழ்வார்.

"பைம்பொன்னு முத்து மணியுங் கோணர்ந்து
படைமன்னவன் பல்லவர்கோன் பணிந்த"

இவ்விடத்தில் "பொன்" என்பதற்குப் "பொற்பூ" என ஒருவியாக்யாநம் உரைகூறுகிறது. பொற்பூ இட்டுத் தொண்டைமான் வழிபட்டதாக வேங்கடாசல மாஹாத்ம்யம் கூறுகிறது. ஆகவே பொற்பூ என உரைகூறுமாசிரியர், பல்லவர்கோனைத் தொண்டைமான்சக்ரவர்த்தியாகக் கருதியுள்ளார் என நாம் ஊகிக்கலாம்.

ஆனல், பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில் வரும் பல்லவர்கோன், தொண்டைமானல்லன் என்று நாம் கொள்ளல் வேண்டும்; ஆசிரியர் பெரியவாச்சான்பிள்ளையே பரமேச்சுரவிண்ணகரப்பதிக அவதாரிகையில் "தொண்டைமான்சக்ரவர்த்தி திருவட்டபுயகரத்திலே அநுகூலித்தபடி அநுஸந்தித்தார். அந்த ப்ரஸங்கத்தாலே பல்லவன்

என்பானொருத்தன் பரமேச்வரவிண்ணகரத்திலே அதிமாத்ரமான ஆநுகூல்யங்களைப்பண்ணி..........." என்று அவனை வேறுபடுத்தினமையான் என்க.

ஷை பெரியவாச்சான்பிள்ளை அருளிய ஸ்ரீஸூக்தி, இப்பதிகத்தில் கூறப்படும் பல்லவனைத் தொண்டைமானினின்றும் வேறுபடுத்தியதேயன்றி, தொண்டைமானைப் பல்லவர்மரபினின்றும் பிரித்துவிடவில்லை என்பதை நுண்ணிதின் உணர்க.

எனவே, சித்திரகூடப்பதிகத்தில் கூறப்பட்ட பல்லவர்கோனும், இப்பாசுரத்தில் கூறப்படும் தொண்டையர்கோனும் வேறல்லர் என்று நம்பூர்வாசாரியர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

"பைம்பொன்னு முத்து மணியுங் கொணர்ந்து படைமன்னவன் பல்லவர்கோன் பணிந்த" என்ற சொற்றொடரின் ஆற்றலால், பகைவர் மீது படையெடுத்து வெற்றி பெற்று அவர் கொடுத்த கப்பத்துடன் திரும்பிய பல்லவர்கோன், பொற்பூ* முதலியவற்றை ஸமர்ப்பித்துச் சித்திரகூடத்தெம்பெருமானை வழிபட்டதாகத் தெரிகிறது. பாண்டிய மன்னனது சிறப்புப் பொருளாகிய முத்துக் கூறப்பட்டதால், இப்படையெடுப்பில் அம்மன்னவன் தோற்கடிக்கப்பட்டிருக்க வேண்டும். சித்திரகூடத்தெம்பெருமானுக்குச் சில ஸமர்ப்பித்துவிட்டு வெற்றியுடன் கொணர்ந்த அப்பொருள்களைக் கொண்டே

---

*அரசர் தாம் வென்றதற்காகக் கடவுளர்க்குப் பொற்பூவிட்டு வழிபடுதல் மரபு: இதனை "ஸத்யாச்ரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடிதொழுதன திருப்பொற்பூ" என்ற இராசராசனது சாசனத்தால் அறியலாம்.

தனக்காகத் திருவேங்கடமுடையான் கோயில் கொண்டெழுந்தருளிய திருவல்லிக்கேணியில் பல திருப் பணிகள் செய்திருக்க வேண்டும் அம்மன்னவன். இதனை, நாம் உய்த்துணரும்படி செய்கிறார் தொண்டையர் கோனைத் "தென்னன்" என விசேடித்து ஆழ்வாரும்.

புறசமயிகளை வென்று சீர்திருத்தி அவர்தம் பொருளைக் கொண்டு திருவரங்கத்தில் திருப்பணி நடத்திய இவ்வாழ்வார் சரித்திரமும் இத்தொண்டையர்கோன் சரித்திரமும் ஒத்திருக்கின்றன அல்லவா?

தொண்டையர் மன்னன் வென்றான் தென்னனைப் படைப்போரிலே. திருமங்கை மன்னன் வென்றார் புற சமயிகளை வாதப்போரிலே. இருவருக்கும் லக்ஷ்யம் திருப் பணிகளே.

தோற்ற புறசமயிகளுடைய ரத்நமயமான ஜைந பௌத்தப் பதுமைகளைக் கொண்டு மண்டபமும் மதிள் களும் திருமங்கை மன்னன் கட்டியதாகக் கூறுகிறார் ஸ்ரீபட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே.

களவுமுறையிலே நாகபட்டினத்துப் பௌத்தப் பள்ளியின்கண் உள்ள பொற்பதுமையை எடுத்து இத் திருப்பணிக்குத் திருமங்கை மன்னன் உபயோகப்படுத்திக் கொண்டதாக விசேடித்துக் கூறப்படுகின்றது.

ஆராய்ச்சியாளர் சிலர் இதனை ஏற்க மறுக்கிறார்கள்: ஆழ்வாருக்குக் களவுப்பட்டம் சூட்டுவது ஸஹிக்க முடிய வில்லை என்கிறார்கள் அவர்கள். தற்கால மனப்பான்மை யுடன் பழைய சரித்திரங்களை நாம் பார்க்கக் கூடாது: அந்தக் காலத்து த்ருஷ்டியிலேதான் நாம் பண்டைய விஷயங்களைக் கவனிக்க வேண்டும். இதனை முதலில் அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

நம்மைவிடத் திருமங்கைமன்னனது சிறப்பினை நன்கு உணர்ந்துகொண்டவர் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளைகள். அவர், ஆழ்வார் சுயநலப்பற்றின்றி பரார்த்தமாக நாகபட்டினத்திலே மகுடபங்கம்பண்ணிப் பதுமையை எடுத்துத் திருப்பணி செய்ததாகக் கூறுகிறார். பெரிய திருமடல் 137-9 கண்ணிகளின் வியாக்யாநம் காண்க. சரித்திரத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளைகள் ஸ்ரீஸூக்தியைவிட வேறு ஆதாரம் தேடுவது அழகுடைத்தன்று.

"நந்திவர்மனுன பல்லவமல்லன் மகன் தந்திவன்மனது 12-ஆவது ஆட்சிவருஷத்தில் அமைந்த சாஸநம் ஒன்று இவ்வூர்க் [அல்லிக்கேணி] கோயில் கர்ப்பகிரகத்தில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. திருமங்கையாழ்வார் கைங்கர்யம் செய்ததாகக் குறிப்பிடுவது தந்திவன்மனேனும் அவன் தந்தை பல்லவமல்லனேனும் ஆதல் வேண்டும்; பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில் கூறப்பட்ட பல்லவனும் பல்லவமல்லனேயாவன்" என்கின்றனர் சரித்திர ஆராய்வாளர்.

இனி, பரமேச்சரவிண்ணகரப்பதிக அவதாரிகையிலே "பல்லவன் என்பான் ஒருவன் பரமேச்வர விண்ணகரத்திலே அதிமாத்ரமான ஆநுகூல்யங்களைப் பண்ணி ஒரோஒன்றை எடுத்தது ஆயிரமாம்படி பண்ணிஞனயிற்று: பின்பு சோழன் கண்டு அதுதான் பொறுக்கமாட்டாமையாலே அவை தன்னையமைத்த வித்தனை" என்று பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி காணப்படுதலால், சோழமன்னனே கச்சிவரை படையெடுத்து, அப்பல்லவனுதிக்சத்தை ஒழித்ததாகத் தெரிகிறது. தந்திவன்மனது 16-ஆவது ஆட்சி வருஷத்திற்குப்

பின்பு, பாண்டியன் மாறன்சடையன் என்ற முதல் வாகுணனல் பல்லவரது தென்னுட்டாதிக்கம் ஒழிந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்: இவ்விஷயங்கள் சிந்தித்தற்குரியன.

நன்மயிலை-மயிலைக்கு நன்மையாவது தன்னிடத்தே திருவல்லிக்கேணியை உடைத்தாயிருத்தல்.

ஆலிநாட்டின்கண் உள்ள மங்கை நகரிலிருந்து தாம் ஆளுதலின், தம்மை 'மங்கையர் தலைவன்' என்று கூறிக் கொண்டார். கன்னி-அழியாமை. மாடத்துக்கு நன்மை யாவது ஆக்கமும் ஒக்கமும் படைத்திருத்தல். காமரு-காமமருவு என்பதன் மரூஉ:விரும்பத்தக்க என்றபடி.

சீர்-ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ: அதாவது, பாரதந்திரியம்.

கலிகன்றி-இவரது திருநாமம்: பாபத்தைப்போக்கு கிறவர் என்பது பொருள்.

கலிகன்றி சொன்ன சொல்மாலை-வேதம்போல் தான்தோன்றியன்று; கலிகன்றி சொன்னது. சொன்ன வர் கலிகன்றியாதலின், சிறந்த பிரமாணமாதலுமகூடும். 'யாத்த' என்னுது 'சொன்ன' என்றார், பேசுவதுபோலே பகவத் விஷயத்தை விளக்கும் எளிமை தோற்றற்கு; இனி, யாப்புக்கு என ப்ரயாஸப்படாது பகவத் அநு பவம் உள்ளடங்காது சொல்வடிவமாய் வெளிப்பட்டமை தோற்றற்குமாம். "கலிகன்றி சொல்மாலை" என்ன அமைந்திருக்க "சொன்ன" எனவேண்டாது கூறினர், இதைத்தவிர மற்றவை எல்லாம் பயனிலசொல் என்பது தோன்ற. அவ்வவ்விடங்களுக்கு இசைந்த மலர்களைத் தொடுத்து மாலைகட்டுவதுபோல, இடத்துக்குஏற்ப இனிய சொற்கள் இசைந்தமை தோற்றச் "சொன்ன

சொல்மாலை" என்றார். "நறிய நன்மலர்நாடி நன்குருகூர்ச் சடகோபன் சொன்ன" எனச்சொற்களை மலர்களாகக் கூறினார் நம்மாழ்வாரும். இங்ஙனம் தொடுத்த சொற்களை மாற்றியமைக்க முடியாமையை 'சய்யை' என்பர் வடநூலார். இப்பதிகத்தில் ஆங்காங்கே அமைந்த சொல்லியைபை யாம் இயன்றவரை எடுத்துக் காட்டினோம். இனி, மாலைபோலே கண்டத்தில் தரிக்கத் தக்கது (மனப்பாடம் செய்யத்தக்கது) என்பது தோன்ற 'சொல்மாலை' என்றாராகவுமாம். இறைவனுக்கு மாலைபோலே போக்யமாயிருத்தல்பற்றி இங்ஙனம் கூறியதாகவுமாம். "எம்பிரானார்க்கு, என்னுடைச் சொற்களென்னும் தூயமாமாலை கொண்டு சூட்டுவன் தொண்டனேனே" என்றார் இவ்வாழ்வாரே பிறிதோரிடத்திலும்.

'உடன்' என்பதோடு அவாய்நிலையான் "பொருள்" என்பது வரவழைத்து உரைக்கப்பட்டது. இனி, 'பத்து' என்பதற்கு "பத்துடையடியவர்க்கெளியவன்" என்புழிப்போல, 'பக்தி' என்றுபொருள்கொண்டு சொன்ன சொல்மாலையைப் பக்தியுடன் வல்லவர்கள் என்றும் உரைக்கலாம்.

வல்லார்-வல்லாராதலாவது உணர்வுமாத்திரமன்றி வகுத்துக்கூறு மாற்றலுமுடையாராதல். "நூலாருள் நூல்வல்லனாகுதல்" என்ற குறளிற் பரிமேலழகருரை காண்க.

கலிகன்றியின் சொல் மாலையில் நாம் வல்லவராகவே, அவர் ஸம்பந்தத்தால் நம்முடைய பாபங்கள் நீங்கி விடுகின்றன. விடவே, நமக்கு வானுலகம் எளிதாகி விடுகிறது. பாபஸம்பந்தம் அறவேநீங்குகைதானே மோக்ஷம்

எனப்படுகிறது. "நான் உன்னை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். வருந்தாதே" என்ற இறைவனைப் பற்றித் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த இப்பதிகமே பாபங்களைப் போக்கடித்து முக்திக்கு ஏதுவாதலின் "சுகமினிதாள்வர்வானுலகே" என்றார். இப் பதிகத்தைக் கற்பதே சுகமாயிருக்கிறதன்றோ? பக்தி முதலானது போல அருமைப்பட்டதன்று; எவ்வளவு எளிய உபாயமிது! இதை விளக்குவதற்கே "சுகமினிது" எனச் சிறப்புற மொழிந்தார்.

முக்தியின்பத்தைவிடத் திருமங்கைமன்னன் திவ்ய ப்ரபந்தப்பாவின்பம் மிகச்சிறந்தது என்பது ஆன்றோர் கண்ட அநுபவம். 'தெள்ளியீர்' பதிகப் பலச்ருதியில் ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளையருளிய வியாக்யாநம் காண்க.

"நீர்மலிவையத்து நீடுநிற்பார்களே" என்பதற்கு "இது கற்றார்க்குப் பலம் ஸம்ஸாரத்திலிருக்கையோ என்ன, பரமபதத்திலே தெள்ளியீர் இல்லையே; தெள்ளியீருள்ளது இங்கேயன்றோ" என்பது அவரது அருமந்த வியாக்யாநம்.

இனிது வல்லார் எனக்கூட்டுக. இனி, "இனிது" எனும் எச்சம் 'ஆள்வர்' எனும் வினை கொண்டு முடிதலுமாம்.

சுகம் இனிது என்பதை வானுலகுக்கு அடையாக்கி உரைத்தலும் ஒன்று. சுகரூபமான இனிதான வானுலகு என்க. விஷ்ணு புராணத்திலும் முக்தி ஆஹ்லாத (இனிதான) சுகரூபமானது எனப்படுவது காண்க.

ஆள்வர் வானுலகே—வானுலகைப் பெறுவதே ஆளுகைதான். வானுலகம் எய்தியவனை "ஸ்வராட்" என்றது சுருதியும். ஸ்வராட்—ஸ்வராஜ்யம் பெற்றவன். கருமத்திற்கு வசப்படாதவன் என்று இதற்குப் பொருள் கூறினர் ஸ்வாமி எம்பெருமானர். முக்தர்கள் ஸ்வராஜ்யம் எய்தியதற்கு ஏற்பத் தலையிலே கிரீடம் அணிந்துள்ளனர் என்கிறர், ஸ்வாமி நம்மாழ்வார். "முடியுடை வானவர்" என்று குறிக்கிறர் அவர்களை அவர். கருமத்தை நீங்கி, இறைவனுக்கு அடிமை செய்து இன்புறுத்தும் நிலைக்கு அறிகுறி, அவர்கள் சூடிய முடி. இறைவனதுமுடி அடிமை ஏற்பதற்கு அறிகுறி. அதனை இவர்கள் சூடார், பரதன் போல.

"அடி பொறையாற்றினல்லது
முடி பொறையாற்றிலன் படிபொறை குறித்தே"

எனப் பரதனைப் பண்டைத் தமிழர் விசேடித்தமை காண்க. "கிங்கரத்வாதிராஜ்யம்" என்றர் அடிமையின் திறத்தை ஸ்வாமி வேதாந்த தேசிகனும்.

இறைவனது உடைமையெல்லாம் அடியாருக்கு உரியவை ஆதலின் வானுலகையே இவர்கள் ஆளுகிறர்கள்: அதாவது இவர்கள் நினைத்தபடியே வானுலகில் எல்லாம் நடைபெறும்: மாறுபட்டு எதுவும் நடைபெறுது என்கிறபடி. இவர்கள் நினைவின் வழியே இறைவன் ஒழுகுவான். கருத்து மாறுபாட்டிற்கு அவ்வுலகில் இடமில்லை. ஜனநாயகம் தழைத்தோங்குகிறது, வானுலகிலே. பெயரளவில் இருக்கிறன் இறைவன். தற்கால அரசர்கள்போல முரணி முடிதுறக்கவில்லை அவன் ஆகவே, நாடு "வானவர் நாடு" ஆயிற்று.

இவ்விஷயமாக நம்பிள்ளைகள் ரஸமாகக் கூறுவதைப் பாருங்கள் :—

"குடியிருப்பாரோபாதியாயிற்று பரமபதத்தில் ஸ்ரீ வைகுண்டநாதனுக்கு; ப்ராப்தி தேசம் நித்யசூரிகள் இட்டவழக்காயிருக்கும்".

பிள்ளை திருநறையூரரையர், 'அடியாரது வைகுந்தம், அவனது வையம்' என்று மிகவும் ரஸமாகப் பணிப்பராம்.

பரமாகாசம் என்று சுருதி கூறுவதற்கேற்ப "வானுலகு" என்றார். வானுலகு—பண்புத்தொகை. இதனால், இதயாகாசமே பரமாகாசம், தனி உலகமில்லை என்பார் மதம் ஆழ்வாருக்கு உடன்பாடன்று என்று தெரிகிறது.

அப்ராகிருதமான முக்தியுலகம் ஒன்று உண்டு என்பது சுருதிஸ்மிருதி இதிஹாஸபுராணங்களால் நன்கு நிச்சயிக்கத்தக்கதாயிருக்கிறது. மற்றும், 'தாமரைக் கண்ணன் உலகு' என்று குறளும் இவ்வுண்மையையே வற்புறுத்துதலும் நோக்கி இன்புறற்பாலது.

ஆக, இப்பதிகம் கற்றவர்கள் வானுலகு எய்தி கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்று மகிழ்வர் என்று தலைக் கட்டினாராயிற்று.

"திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து புகன்மின் புகன்றேன் -மருந்தாம்
கருவல்லிக் கேணியா மாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர்"

—பிள்ளைப்பெருமாளையங்கார்.

பேயார் திருமழிசைப் பெம்மா னருட்கலியன்
வாயாரச் சொன்ன வளங்கவியில்—மேயான்
திருவல்லிக் கேணியான் சீரருளே வாளாம்
கருவல்லிக் காலறுக்குங் கால்.

எறிகடல் வந்த லேக்கும்
எழிலல்லிக் கேணி கண்ட
அறிவுடை யாழ்வார் பாடற்
கலைவரு மறிய வான்றோர்
முறையிலே பிறழா தேகி
மூண்டபே ரன்பி னாலே
சிறியனே னுரைசெய் தேனல்
சீர்திரு மலேநல் லானே.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. ———— சு.ப்.ம்
110933
EGMORE, MADRAS-8

THE AKHAND JYOTHI PRESS LTD., MADRAS 5

CA
A-10

Wrapper Designed & Printed by:
S. Pundarikatshum Naidu
at The Modern Printers, Madras-1